# சுதந்திர வேட்கையின் விடிவலைகள்



வட்டூர்க்கவிஞர்
கதிர் சரவணபவன்

N. Tamilarasu

# சுதந்திர வாழ்வில்

# விடிவலைகள்

தமிழரசி. நடராஜா.

★

ஆக்கம்
வட்டூர்க் கவிஞர்
கதிர் சரவணபவன்

★

திருவடி நிழல்
கண்ணகை அம்மன் 1ம் ஒழுங்கை
வட்டு – மேற்கு
வட்டுக்கோட்டை

முதற்பதிப்பு:

1995. யுவ. சித்திரை 27

பிரதிகள்:

1000

பதிப்புரிமை:

ஆசிரியருக்கு உரியது

## உள்ளே..


1. ஆசிச் செய்தி
2. முன்னுரை
3. அணிந்துரை
4. வாழ்த்துரை
5 வாழ்த்துரை
6 வாழ்த்துரை
7. நூலாசிரியர் அறிமுகவுரை
8 என்னுரை
9. தமிழ்த்தாய் வணக்கம்
10. நவீன காலக் கண்ணோட்டத்திற் பாரதி
11. விலையிலாத் தமிழின விடியலில் திலீபன்
12. வண்ணப் படுக்கையில் திலீபன்
13. மாவீரர் நினைவு
14. கரும்புலி நினைவு
15. தூபமாய் தூவியே தூங்கினாய்
16. வாடையில் ஊறிய வாரிசு வேங்கைகளானவம்மா
17. ஓங்கிய மொழியெங்கள் மொழியதே
18. சிறையினில் அடைந்திட்ட கிளிகள் இன்று சிறகது முளைத்து வான் பறக்க
19. எங்கள் வேங்கை இணையிலாப் பரணியை இசையுடன் பாடுவோம்
20. ஈழமே! ஈழமே! என்று நீ வாராயோ!
21. நேயம் காட்டி ஈழம் சேர்க்கப் பொன்னைக் கொடுப்பாய்
22. வேங்கை யென்றும் நீடு உயரவே உயரவே
23. தமிழன் திறம்பாடும் மணியிது
24. நாடு - ஈழ - நாடு
நாடு - ஈழநாடு - இது நாடு ஈழநாடு
25 காலமெல்லாம் வேங்கை வெற்றி பார்த்திருப்போம்
26. வாரும் வாரும் நீர் தோழரே
27. மாவீரரே நும் நினைவுகள் தூங்கவில்லை மாவீரரே
28 படைகள் திரள உடைகள் புலியாய்ப் போ!

29. நாட்டின் தியாகிகள் வாழ்க நீரே
30. கேடுகெட்ட வாழ்விதுவோ கேள்வி கேட்கும் மாந்தர்களே
31. என்றும் வாழிய
32. நாட்டுச் சிந்து 1, 2, 3
33. கப்பற் பாட்டு
34. மாவீரர் பாடல்
35. மேதின ஊர்வலம்
36. இனிய சுதந்திரம் இசைவுடனே பெறுவோம்
37. மேதின ஊர்வலப் பாடல்கள்
38. நாட்டுக்கூத்து சிந்து மெட்டு
39. பொம்மரும் கெலியும் வந்து பலியெடுக்குமோ
40. மாவீரர் தானம்
41. நாட்டுக் கூத்து
42. மாவீரர் தாயகம் காத்தாரடி
43. காவடிச் சிந்து
44. சிலத்தமிழர் வாழ்வு
45. நீங்காத நினைவலைகள்
46. மாவீரர் கஜேந்திரன்
47. அன்னை பூபதி
48. திலீபா
49. பார்வையிலே படையினையே நடுங்க வைத்தாய்
50. பத்துத் தளபதி படையில் மடிந்து புலிகளுக்கே ஜெயம்
51. சாகரவர்த்தனா சாய்ந்தது

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத் தலைவர்

## அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகம்

அவர்கள் நல்கிய

# ஆசியுரை

சங்கத் தமிழ் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவர்களின் ஆக்கமான தமிழ். அக்காலப் புலவருட் பலர், வாசமலர்த் தேனுண்டு இன்பத்திலாழ்ந்து மயங்கும் வண்டுகளைப் போல காதல் பற்றி, ஆண் பெண் உறவு பற்றி விரித்துக் கூறும் அகப்பொருள் நூல்கள் ஆக்குவதில் இன்பம் கண்டனர். சிற்றின்ப வாழ்க்கையை அழகாகச் சித்திரிக்கும் ஓவியங்கள் அவை. பின்னர் தோன்றிய சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் அந்தக் காதலுறவுகளை அருள் வழியிற் பொருத்தி, இறைவன் நாயகனாகவும் தாங்கள் நாயகியாகவும் அமையப் பிரபந்தங்கள் பாடினர்.

சங்கப் புலவர்களில் வீரம், தன்மானம், அன்பு, இரக்கம் என்னும் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறம், பரணி பாடினோரும் பலர் உளர். பிற்காலப் புலவர்களிற் பலர் யாராவது அரசனையோ வள்ளலையோ புகழ்ந்து பாடி, அவர்கள் கொடுப்பதைப் பெற்று உண்ணும் இரவலர் வாழ்க்கையில் இருந்தவர்களாயே காணப்படுகின்றனர்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் உதித்த சுப்பிரமணிய பாரதியாரின் காலத்திலிருந்தே தமிழ்ப் புலவர்களின் போக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டது. ஆங்கிலேயரின் சுரண்டல் ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறவேண்டுமென்று வடநாட்டிலே கோகலே, லாஜ

பதிராய், காந்தியடிகள், திலகர் போன்ற தலைவர்கள் கிளர்ச்சிக் குரல் எழுப்பினர். தென்னாட்டிலும் அவ்வேளையில் கப்பலோட்டிய தமிழன் சிதம்பரப்பிள்ளை, சுப்பிரமணியசிவா முதலானோரும் விடுதலை முழக்கம் செய்தனர். இவர்களின் கிளர்ச்சிகள் முழக்கங்களுக்குத் தூண்டுகோலாகச் சுப்பிரமணியபாரதியார் கவிதைகள் பாடினார். அவரிலும் விஞ்சிய உணர்ச்சியுடைய புலவராசய் "கொலைவாளினை எடடா கொடியோர் செயலறவே" என்று முழங்கிய பாரதிதாசன் போன்ற புரட்சிக் கவிஞர்களும் தோன்றினர்.

எங்கள் இலங்கையிலும் நாவலருக்குப்பின் சேர். பொன். இராமநாதன், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், போன்றோர் முதலில் ஆங்கில ஏகாதிபத்தியத்தையும் பின்பு சிங்களப் பேரினவாதத்தையும் எதிர்த்துப் பேச்சுவார்த்தை, சமாதானம், அகிம்சைப்போர் தொடுத்தனர். இவை காரணமாகத் தமிழ்த்தலைவர்களும், சிங்களத்தலைவர்களும் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் அனைத்தும் புறக்கணிக்கப் பட்டும் கிழித்தொழிக்கப்பட்டும் வீணாயின. இந்த நிலையிலே தன்மான உணர்வும் துணிச்சலுமுடைய வீர இளைஞர்கள் திரு. பிரபாகரனுடைய தலைமையிலே பேரினவாத ஆட்சியை முறியடித்துத் தமிழின விடுதலை பெற ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். இவ்வாறு போருக்கு அணிதிரண்ட புலிகள் இயக்கத்துக்கு உத்வேகம் கொடுக்க பதுவை இரத்தினதுரை, வாஞ்சிநாதன் போன்ற வீர உணர்ச்சி கொண்ட கவிஞர்கள் போர்க்கவிதைகள் பாடுவாராயினர்.

எங்கள் வட்டூர்க் கவிஞர் கதிர். சரவணபவன் இந்தக் கவிஞர்களின் உணர்ச்சியலைகளால் ஈர்க்கப்பட்டார். முதலிலே பார்வையாளராக இருந்தவர் பின்பு பங்காளரானார். வீரவேங்கைகளின் தெருக்கூத்துக்கள், புரவியாட்டம், கவியரங்குகளிற் பங்கு பற்றி விடுதலைக் கவிகள் பாடினார். இன்று வீரகாவியம் படைக்கும் விறலுடைக் கவிஞராக விளங்குகின்றார். அவர் பிறவியிலேயே கவிஞர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்து இற்றைக்கு 44 ஆண்டுகளுக்கு முன் மறைந்த முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களின் மரபிலே உதித்தவர் அவர். அவர்களின் பேரனார் அவர். அவர்களுடைய சாயலும் புலமைத்திறமும் இவரிலே அமைந்திருத்தலை அறிவாளர் காண்பர்.

கவிஞர் சரவணபவனுடைய பாடல்களை அவர் உணர்ச்சியுடன் பாடக் கேட்டும், அவற்றைப் படிகள் எழுதிக் கொடுத்தும் மகிழ்ந்தவன் நான். அந்தப் பாடல்கள் இன்றைய போர்ச் சூழலைப் படம் பிடித்துக் காட்டுவன. அநாயாசமாக அமைந்த அப்பாடல்கள் ஆற்றொழுக்குப் போன்று தங்குதடையின்றி நடப்பன.

''நவீனகாலக் கண்ணோட்டத்தில் பாரதி'' என்ற தலைப்பில் பாரதியாரின் நாட்டுப் பற்று, மொழிப்பற்று, புதுமைப்பெண் பற்றிய கருத்துக்களையும், மாவீரர், தியாகிதிலீபன் என்ற தலைப்புகளில் உணர்ச்சி ததும்பும் கருத்துக்களையும் எடுத்துப் பாடுகின்றார். புரவியாட்டத்தில் தமக்குள்ள திறமையையும் கவிதைகளில் சுட்டிக் காட்டுகிறார். அன்னாரின் கவிதைகள் நூலுருவம் பெறக் கண்டு மகிழும் நான் இவைபோன்ற கவிதைகள் பலபடைத்து முற்போக்குக் கவிஞராக மிளிரவேண்டுமென ஆசிகூறுகின்றேன்.

வணக்கம்.

# முன்னுரை

சமூக விருத்திக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அயராது உழைப்பதற்குச் சிலமுஞ் செம்மையும் நிறைந்தவர்கள் உருவாக வேண்டும் என்பதை யாரும் ஒத்துக்கொள்வர். இத்தகைய சமூகத்தை நாட்டில் உருவாக்குவதற்காக கவிஞர் கதிர் சரவணபவன் அவர்கள் தனது முழுமையான பங்களிப்பை ஆற்றிவருகின்றனர் இவரது இந்நூலானது இன்றைய சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் காலத்தின் கண்ணாடியாக விளங்குவது சிறப்பானதாக அமைந்துள்ளது. பாரதி அன்று கூறிய கருத்துக்களை நவீன நோக்கில் கண்கொண்டு ''சுதந்திர வாழ்வின் விடிவலைகள்'' என்னும் இந்நூலை எழுதியமை மனங்கொள்ளத்தக்கதாய் உள்ளது.

திரு. கதிர் சரவணபவன் அவர்கள் சிறுவயது முதலாக் கலைகளில் ஆர்வமுள்ளவராகவும் கல்லூரிக் காலத்தில் பேச்சுப்போட்டிகளில் வல்லவராகவும் சிறந்து விளங்கியவர். தற்போது வில்லிசை கதாகலாட்சேபம், சமயச் சொற்பொழிவுகள் போன்றன ஆற்றுவதிலும் முன்னிற்பவர். இவரது ஆக்கங்கள் பல வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

"நவீன கால கண்ணோட்டத்தில் பாரதி'' ''ஈழமே ஈழமே என்று நீ வாராயோ'' ''வண்ணப்படுக்கையில் திலீபன்'' போன்ற இன்றைய சமூகத்தோடு ஒன்றிய இவரது ஆக்கங்கள் மிகுந்த பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சங்கானை வட்டவை பிரிவூடாக இவரது ஆக்கமாகிய ''மாவீரர் தெருக்கூத்து'' 16 இடங்களில் நடாத்தப்பட்டமை இவரது ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இன்னும் இவரது கவிதைகளும் இவருடைய எழுத்தாக்க வன்மையை எடுத்து இயம்புவனவாய் அமையப் பெற்றுடள்ளன.

இந்த வகையில் எமது சமூகத்திற்கு தொண்டாற்றும் எழுத்தாளர்களை கௌரவித்து ஊக்குவிப்பதுடன் அவர்களது ஆக்கங்கள் வளரவேண்டும் எனவும், கேட்டுக்கொள்வதுடன் கவிஞர் கதிர் சரவணபவன் அவர்கள் எழுதிய இந்நூலுக்கு முன்னுரையை எழுதுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.

கா. சந்திரராசா
பிரதேச செயலாளர்/மேலதிக அ அதிபர்
வலிகாமம் மேற்கு சங்கானை



# அணிந்துரை

கவிஞர் கதிர். சரவணபவன் எழுதிய சில கவிதைகளைக் கொண்ட இத்தொகுதிக்கு முன்னுரை ஒன்று எழுதுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். இந்த நூற்றாண்டுக் கவிஞன் பாரதியின் பல்வேறு நோக்குகளை முதற் கவிதையிலே எடுத்துக் கூறும் கவிஞர் தொடர்ந்து வரும் கவிதைகளெல்லாம் தமிழீழப் போராளிகளின் தன்னலமற்ற தற்கொடைகள், மாவீரரின் சிறப்புகள், திலீபனின் தியாகம் ஆகியன பற்றி யெல்லாம் கூறுகின்றன.

வீரவேங்கைகளின் விந்தைமிகு செயல்களைப் பாடவேண்டுமென ஆசிரியர் ஆசைப்படுகிறார்.

வேங்கை வீரர்கள் விரைந்தனர் பாசறை
ஓங்கு தமிழுக்காய் உணர்வினைச் செலுத்தியே
மாங்குளம் கொக்காவில் மணலாறு எனப்பல
தாங்கா அரண்களைத் தகர்த்தனர் தரணியில்

என்று வேங்கை வேரர்களையும் அவர்கள் தகர்த்துக் கைப்பற்றிய களங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். அதேவேளை அவர்களுடைய நாடுகாக்கும் பணி பற்றியும் எண்ணுகிறார்.

"பாடுபட்டுத் தேடுமிந்தப் பசுங்குவியல் நெல்லையெல்லாம்
நாடுகாக்கும் வேங்கையோடு நாமும்சேர்த்துக் காத்திடுவோம்"

என்று பாடுமிடத்து, வேங்கைகள் மட்டுந்தான் காப்புப்பணியிலே ஈடுபடுவதென்றல்ல; மக்களும் அவர்களுடன் சேரவேண்டுமென்பதைத் தெளிவாக்குகிறார்.

மக்களுக்கும் போராளிகளுக்கும் நம்பிக்கையினையும் எழுச்சியினையும் ஊட்டும் பாடல்கள் நாட்டுப்பாடல் மெட்டுக்களிலே கவிஞர் தருகிறார். எடுத்துக்காட்டாக அவருடைய கப்பற்பாட்டுக் கவிதையிலே

விலங்குகளும் பறவைகளும் ஊர்வனவும் பிறவும்
கலங்கியே துன்பத்தில் மூழ்கியே கிடக்க
இலங்குபுகழ் வேங்கைகள் இருநில மீதினிலே

இசைவான போர்தெர்டுத் தேற்றிய பொங்கல்
ஏல ஏலோ - தந்தைதாம் - ஏல ஏலோ.

என்று கூறுவதைக் காணலாம்.

நாட்டுக் கூத்திலே கவிஞருக்கு ஈடுபாடு இருப்பதனாலே கூத்து மெட்டுகளிலும் பல கவிதைகள் புனைந்துள்ளார்.

எல்லாவகைச் சுதந்திரத்தினையும் கவிஞர் எண்ணிப் பார்க்கிறார். போரினாலே மண்ணை மீட்டாலும் எங்கள் வாழ்வு சிறக்கப் பல்வேறு செயற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொருளாதாரத் தடை காரணமாக எரிபொருளுக்கு மரத்தை வெட்டினால், அதற்கு ஈடுசெய்யப் புதிய மரங்கள் நாட்டிச் சூழல் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமென்ற பொருளைப் புலப்படுத்துவதாக "இனிய சுதந்திரம் இசைவுடனே பெறுவோம்" என்னும் கவிதையிலே,

"மரக்கன்று நாட்டியே மாற்று வழிசெய்யின்
மாவுயிர் வாழுமென்பாம் — நாட்டிற்கு
இரங்குவான் வருணனும் எழில்மிகு சோலையாய்
இத்தமிழ் ஈழம் வாழும்"

என்று பாடுகின்றார்.

கவிஞன் தான் வாழும் காலத்து மக்கள் உணர்வுகளை நன்றாக உள்வாங்கிக் கொள்பவன் கவியரங்குக்காகவும் கவர்ச்சிக்காகவும் அரையவியலாகப் படைக்கப் படுபவற்றை யெல்லாம் கவிதைகள் என்று நாம் இன்று முத்திரை குத்தினாலும், அவை காலத்தால் ஏலம் போய்விடக் கூடியன. மக்கள் உணர்வை, மண்ணின் மணத்தை உள்வாங்கிக் கவி புனைபவன் கட்டாயமாகத் தன் வாழ்நாள் நிகழ்வுகளைத் தன் ஆக்கங்களிலே தேக்கி வைப்பதோடு, அவற்றை கலவடிவங்களாகவும் ஆக்கிவைப்பான். கவிஞர் கதிர் சரவணபவன் இக்கால நிகழ்வுகளுடன் தன் கவிதைகளிலே வாழ்கிறார். இவருடைய கவிதைகள் இன்றைய போராட்டச் சூழ்நிலைக்கு ஏற்றவை. இக்கவிதைகள் நூலுருவாக வருகின்ற வேளையிலே இந்நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதும் வாய்ப்புக் கிடைத்தமையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர், கலாநிதி
அ. சண்முகதாஸ்
தலைவர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்

# குரலெடுத்துக் கூவும் ஒரு விடுதலைக்குயில்

கதிர் சரவணபவன் கலைஞனாகவும், கவிஞனாகவும், இருதளத்தில் நின்று கலை இலக்கியப்பணியாற்றிவருபவர்.

இந்த மண்மீதும், இங்கு நடைபெறும் விடுதலைப் போராட்டம் மீதும், அது ஏற்படுத்திவரும் சமூக பண்பாட்டு மாற்றங்களின் மீதும் தளராத நம்பிக்கையும், பிடிமானமும் மிக்கவர். இந்தப் பற்றுணர்வே இவரிடமிருந்து கவிதைகளாக வெளிப்படுகின்றன.

"எங்கள் தந்தையர் நாடென்ற போதினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று பெருமிதமடைந்தான் பாரதி.

கதிர் சரவணபவனோ தான் பிறந்த யாழ்ப்பாண நகரை "புலிகள் வாழ்ந்து போர் ஜெயித்த நகர்" என்று பெருமையுடன் சொல்கிறார்; மரபுக் கவிதைகளாக தியாகி திலீபனை, மாவீரரை, கரும்புலிகளை கேணல் கிட்டுவை, களத்தில் நிற்கும் புலிப்போராளிகளை, யுத்தத்தால் சிதைந்த மண்ணை எல்லாம் இவர் பாடுகிறார். அனேகமானவை கவியரங்கக் கவிதைகளே.

அதியுயர்ந்த இலக்கியத்தரம் வாய்ந்தவை யெனக் கூற முடியாவிடினும் ஈனநிலை கண்டு கொதிப்புறும் படைப்பாளிக்குரிய பக்குவம் இவரது கவிதைகளில் தெரிகிறது.

சமூகப் பொறுப்புணர்வோடு தொடர்ந்தும் இவர் கலை, இலக்கியங்கள் படைக்கவேண்டும்; இந்த மண்ணுக்குப் பணியாற்ற வேண்டும் என இவரை வாழ்த்துகின்றேன்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

அன்புடன்

புதுவை இரத்தினதுரை

# எதிர் காணும் விடுதலைக்கு விசையாக.........

ஒரு கவிஞன் தான் வாழும் சூழல் தனது நடத்தை சார் இயல்புகள் அதன்வழி மன உணர்வுந்தல்களால் பாதிப்படைகிறான். இந்த மண்ணின் விடிவிற்காய் அதேநோக்காய் அர்ப்பணிக்கப்பட்ட வீரதியாக சாதனைகள் கவிதை வடிவில் சித்தரிக்கப்பட்டு எமது பாரம்பரிய இலக்கியமாகின்றது.

கலை இலக்கியமானது ஒருமொழியினதும் அதன் வாழ்வினதும் அதிஉச்ச பயன்பாடாக அமைவதோடு அந்தவாழ்வின் மெய்மைகளை வெளிப்படுத்தவும் வேண்டும். அந்தப்பணியில் இம்முயற்சி, வாழ்வோடு இணைந்த போராட்டமாக, போராட்ட இலக்கியமாக உலகறியச் செய்யும். விடுதலைக்காக உயிர்த்துடிப்புடன் சத்தியக்கனவின் எரிதணலாக கிளர்ந்து நிற்கும் மக்களின் ஆவேசப்பிரவகிப்பாக எமது தேசத்தின் விடுதலைக்கும், வளமான வாழ்வுக்குமான விசையாக இந்நூலில் உள்ள கவிதைகள் பரிணமித்துள்ளன.

தேசிய விடுதலைப் போராட்டம் மென்மேலும் கூர்மைப்பு பெறுகிறது. என்பதற்கு இக் கவிதைகளே சாட்சிகளாகின்றன கவிஞர் கதிர் சரவணபவன் அவர்களின் முயற்சிகள் மேலும் தொடரவும் வளரவும் எமது இயக்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்புடன்

சி. இளம்பருதி
அரசியல் துறைப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப்புலிகள்
யாழ். மாவட்டம்.

# வாழ்த்துரை

வட்டுக்கோட்டையூர் கவிஞர் கதிர் சரவணபவன் அவர்களின் கவிதைநூல் ''சுதந்திர வாழ்வின் விடிவலைகள்'' என்பது வெளிவருவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் மாவீரர் தெருக்கூத்து, மேதின ஊர்வல நிகழ்ச்சி' தியாகி திலீபனின் உண்ணாவிரத அஞ்சலி நிகழ்வுகளிலும், கேணல் கிட்டு அவர்களின் அஞ்சலி நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு கலை நிகழ்வுகளையும் கவிதை ஆக்கங்களையும் வெளியிட்டு உணர்வு பூர்வமாகப் பங்காற்றி வருகின்றார்.

இவரின் நூல் வெளியீட்டு விழா சிறப்படைய எனது நல் வாழ்த்துக்கள்.

''புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்''

சி. கிரன்
சங்கானை வட்டவை
அரசியல் துறைப் பொறுப்பாளர்

# என்னுரை

என் அன்புக்குரியவர்களே!

நெஞ்சுக் குழியில் நீண்டநாட் கனவாகக் கிடந்த ஆசையொன்று இன்று நிறைவேறுகின்றது. என் இளைய பருவத்திலிருந்து நான் எனது கவிதைகளை அச்சில் காண ஆசைப்பட்டேன். இன்று "சுதந்திர வாழ்வின் விடிவலைகள்" என்ற நூற்றொகுதியாகக் காணும்போது பெருநிறைவும் பேருவகையும் அடைகின்றேன்.

இந்நூலில் இடம்பெறுகின்ற கவிதைகளும், பாடல்களும் என்னாலும் என்னோடு இணைந்த வட்டூர்க் கலைஞர்களாலும் நேரடிக் களத்திலும், கவியரங்குகளிலும், போராட்ட காலங்களில் வெளிப்படுத்தப்பட்ட உள்ளத்தின் உணர்வூற்றுக்கள். பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் சிசுவினைக் காணும்போது பாசத்தாற் குதூகலிக்கும் நிலையில், காலத்தே பயிர் செய்யவேண்டிய தேவை "சுதந்திர வாழ்வின் விடிவலைகள்" என்ற பிரசவத்தினால் பிரமிப்படைகின்றது.

மலையே வரினும் நிலைகலங்கா மனவுறுதி படைத்த தேசியத் தலைவனின் போராட்ட வலுவிற்கு உரம் கூட்டிப் பசளையாகிய படைப்பாளிகளின் படைப்புக்களிலே இக்கன்னிப் படைப்பினையும் ஒன்றாகத் தமிழன்னையின் பாதங்களில் காணிக்கையாய்த் தவழ விடுவதில் தன்னிறைவு பெறுகின்றேன்.

இம்மாது பூத்துக் காய்த்துப் பொலிவுபெறப் படியெடுத்துத் தந்து ஆசியுரை வழங்கிய பேராசான் அருட்புலவர் பண்டிதர் திரு அ. ஆறுமுகம் ஐயாவினது அடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன். கலைஞர்களை ஊக்கிக் கௌரவிப்பதில் கலங்கரையாய்த் திகழும் கலாச்சாரக்குழுவின் தலைவரும், பிரதேசச் செயலரும் ஆகிய திரு கா. சந்திரராசா ஐயா அவர்கள் கலாச்சாரக் குழுவின் சார்பில் கவி நூல் வெளியிட முன்வந்து, முன்னுரையும் தந்து, வெளியீட்டு விழாவின் தலைமையையும் ஏற்று, வேண்டும் உதவி விருப்புடன் செய்தமைக்கு அவருக்கும் கலாச்சாரக் குழுவினருக்கும் நூலாசிரியன் என்ற வகையிலும் கலாச்சாரக் குழுவின் உறுப்பினன் என்ற வகையிலும் நன்றியையும் பாராட்டினையும் நவில்கின்றேன்.

தகையற்ற எந்தன் நூலுக்கு தகைசேர்த்து தன்னிறைவு பெறச் செய்து ஆய்வுரை வழங்க ஒப்புக் கொண்டு, அணிந்துரையும் வழங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர், கலாநிதி திரு அ. சண்முகதாஸ் ஐயா அவர்களது பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

கலைஞர் தம் காலம் பொற்காலம் எனும் இக்காலத்தில் கலையின் பண்பாட்டுப் பரிணமிப்பினைக் கட்டிக் காத்து கலையுள்ளங்கள் கலங்கா கணக்கற்ற பணியாற்றிக் கௌரவித்து வரும் தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் இந்நூலினைப் பரிசீலித்து வெளியீட்டுரை வழங்க முன்வந்ததோடு வாழ்த்துரையும் வழங்கிக் கௌரவித்து ஒத்தாசைகள் புரிந்தமைக்கு உள்ளத்தின் உயர்வுடன் உணர்வு பூர்வமான பாராட்டையும் நன்றியையும் சொரிகின்றேன்.

கலையினை நேரிற் கண்டு கலைஞனின் திறமறிந்து கவிதை நூல் பரிசீலித்து கவின் வாழ்த்துரையும் தந்து, வாழும் காலத்தில் வழங்கிடு கௌரவிப்பும் வேண்டும் கலைஞர்க்கென்ற வேணவாக் கொண்டு எந்தன் வெளியீடு சிறக்க வாங்கு ஒளியொடு மேடையாவும் ஒளிபெறச் செய்து தந்த யாழ்மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு இளம்பருதி அண்ணா அவர்கள் இதயத்தாற் செய்த நன்றிக்கு இதயபூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் இனிதே இயம்புகின்றேன்.

போராட்ட வாழ்விலே புத்தாக்க மளித்துவரும் சங்கலை வட்டணைப் பொறுப்பாளர் திரு சி. கிரன் அவர்கள் இந்நூலிலுள்ள பாடல்களைக் களத்திலே சிறக்க கண்ணியமாய் உழைத்ததோடு வாழ்த்துரையும் வழங்கியதையிட்டு என் உள்ளுணர்வால் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் ஆய்வுரையைச் செய்ய முன்வந்த யாழ் - பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியம் ஐயா அவர்களுக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரித்தாகட்டும். நூலாசிரியர் அறிமுகவுரையை மனமுவந்து நல்கிய வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபரும் எழுத்தாளருமான திரு நா. க. தங்கரத்தினம் (நகுலன்) அவர்களுக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரித்தாகட்டும்.

நன்றி

கதிர் - சரவணபவன்

# ★ வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவன் ★



வட்டுக் கோட்டையூர் முது தமிழ்ப் புலவர் திரு மு. நல்லதம்பி அவர்களது பேரனான வட்டூர் கவிஞர் சரவணபவன் அவர்கள் ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியகல்லூரிகளிலும் பெற்றுக் கொண்டவர் படிக்கும் காலத்தில் வட மாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் பரிசில்களை பலதடவை பெற்றுக் கொண்ட இவர் நாட்டுப் பாடல்கள் நாட்டுக் கூத்து, காத்தவராயன் கூத்து முதலான கலைத் துறைகளில் ஈடுபட்டு பாண்டித்தியம் பெற்றவர்.

பொது வைபவங்களில் வில்லிசை நிகழ்ச்சிகளையும் சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி பொதுமக்கள் ரசிகர்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்ற கவிஞர் சரவணபவன், 1979 இல் பச்சிலைப் பள்ளி இளைஞர் விவசாயக் கழத்தினால் நடாத்தப் பெற்ற சொந்த ஆக்கப் பாடற்போட்டியில முதற் பரிசும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 1980 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப் பெற்ற கவிதைப் போட்டியில் பரிசும் 1982 ஆம் ஆண்டு (அகில இலங்கை ரீதியில்) நடாத்தப் பெற்ற நாட்டுப்பாடல் போட்டியில் முதற் பரிசும் புதுக்கவிதைப்போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றுக் கொண்ட பெருமைக்குரியவர்.

எந்த விடயத்தைப் பற்றியும் நினைத்தவுடன் சிறப்பான முறையில் உணர்ச்சி ததும்ப கவிதை இயற்றக்கூடிய ஆற்றல் மிக்க இவரது கவிதைகளில் இலக்கிய அந்தஸ்த்து மேலோங்கி நிற்பதைக் காணலாம்.

அண்மைக்காலத்தில் தமிழீழ போராட்ட நிகழ்வுகளில் சொந்த ஆக்கங்களைத் தயாரித்து வெளிப்படுத்தி வரும் இவர் தியாகி திலீபன், கிட்டு அண்ணா, மேதினஊர்வலம், தெருக்கூத்து முதலான நிகழ்வுகளில் பங்குகொண்டு தன் திறமையை நிலைநாட்டியுள்ளார்

கவிதை, நாடகம், நாட்டுக்கூத்து, பேச்சு,வில்லிசை முதலான இன்னோரன்ன பல துறைகளிலும் ஈடுபட்டு மங்காப்புகழ் பெற்ற சகல கலா வல்லுநரான கவிஞர் சரவணபவன் தற்போது போராட்ட காலங்களில் வெளிக்கொணர்ந்த ஆக்கங்களைத் தொகுத்து ''சுதந்திர வாழ்வின் விடிவலைகள்'' என்னும் பெயரில் நூலாக வெளியிடுவது பாராட்டுக்குரியது. கவிஞர் சரவணபவன் இலக்கிய அந்தஸ்துள்ள தரமான கவிதைகளை தொடர்ந்தும் இயற்றி நீடூழிவாழ எனது வாழ்த்துக்கள்.

நா. க. தங்கரத்தினம்(நகுலன்)

# தமிழ்த்தாய் வணக்கம்



நாம் வணங்கும் தமிழன்னையே - எங்கள்
நல்லோங்கு தமிழுக்கு நல்லாசி புரிவாயே
(நாம்)

ஐம் பெருங் காப்பியங்கள் ஐம்புலனறிவாலே
செம்பொருள் செழுமையுற செந்தமிட்கழகு செய்ய
தம்பதத் தேன் நல்கும் திருக்குறள் மணம் வீச
அம்மைநின் புறநானூ றகநானூ றணிசெய்ய
(நாம்வணங்கும்)

வண்ணத் தமிழுக்கு வந்திடவோ வசைகள்
எண்ணற்ற ஏதடைக ளிடுக்கண் ணிருப்பதுவோ
மண்ணனின் சுதந்திர மாதுநீ யென்றுரைக்கக்
கண்ணிற் கனிந்திடவோர் காட்சியிற் பொலியம்மா
(நாம்வணங்கு

# நவீன காலக் கண்ணோட்டத்திற் பாரதி

(வலி - மேற்குப் பிரதேச சபையும், சங்கானைப் பிரதேச செயலர் அலுவலகமும் இணைந்து நடாத்திய பாரதிவிழா விற் பாடியவை)

செந்தமிழின் மணபரப்பச் சீர்கவிதைத் திறமதுவால்
முந்திவந்த மூத்தகவி முழுநிலவுக் கவிகாரை
சுந்தரம் பிள்ளைஐயா சுடருமுயர் தலைமயிலே
மந்தமா ருதக்கவிஞர் மலிந்திருக்கு மேடையினில்
என்றன் கவிதையினை எடுத்திசைக்க வருகின்றேன்
சொந்தக் கவியாக்கும் செந்சொற் கவிஞருக்கும்
சந்தக் கவிபடைத்த செந்தமிழன் பாரதிக்கு
இந்தக் கவியரங்கில் இனியவிழாச் சமைத்துள்ள
சந்திர ராசத் தகுமுதவி யரசதிபர்
நந்தம் செயலாளர் திரவிய மவர்களுக்கும்
விந்தைமிகு விழாச்சபையின் வியத்தகு குழாத்திற்கும்
பந்தியிலே வந்தமர்ந்து பாடிடும் கவிகேட்க
முந்தியே வந்தமர்ந்த மூத்தகுடி மக்களுக்கும்
என்றன் தலைவணங்கி இனிமையுறு கவிதையினைச்
சிந்தையிற் கொள்வதற்த் தேர்ந்து தருகின்றேன்
குந்தகம் குறைகளைந்து குணமளைந்து கொண்டிடுவீர்,

பாட்டுக் கொருபுலவன் பாரதி யென்றுணர்ந்து
பாடிவைத்த புலவனது பாடலையும் நாமறிவோம்
பாட்டுக்காய்ப் பாடவில்லல அப்பாட்டின் உணர்வலைகள்
நாட்டினிலே தமிழீழ நாதமாய் ஒலிக்கிறது
நீட்டமாய் அன்னியர்தம் நீளடிமை நாமோவென் (று)
ஊட்டிய சுதந்திர உள்ளுணர்வுப் பயிரின்று
வாட்டமிலாப் பயிரதுவாய் வேங்கைநல் விருட்சமதாய்-யாழ்
கோட்டையிலே அந்நியர்தம் கோட்டம் அடக்கிமுனை

பூட்டிய விலங்கொடித்துப் போர்க்கொடியிற் படைநெரித்து
நாட்டமுறு தமிழீழ நாதமாய் ஒலிக்கிறது.
விதியினை நொந்துமிகு வேதனையிற் பாடியவள்
மதியினில் விளைந்த மலர்க்கொத்துக் கவிதைபல
விடிவலைகள் தூரமில்லை வீரமது சாகவில்லை
கொடியினிலே கரும்புலியாய்க் கடற்புலியாய் உயிர்பிரிந்து
மடிந்திடினும் மானம் மனவுறுதி தானென்று
துடிப்புடனே போர்க்கொடியைத் தூக்கிநிற்கும் கதை
சொல்லும்

நவீன காலத்தில் நம்கவிஞன் பாரதிக்குப்
புவியினிலே விழாவெடுக்கும் பதமெனவ பாரோரே
சுப்பரும் பொம்மரும் சுற்றிச்சுற்றி வட்டமிட
அப்புவும் ஆச்சியும் அண்ணரும் தம்பியும்
தப்பாமற் குண்டுபட்டுத் தலைசிதறிப் பலியாகி
அப்பாவும் அம்மாவும் அருகேயிங் கில்லையெனக்
கப்பிக்கப் பிக்குழந்தை குஞ்சு கதறியழ
உப்புக் கண்ணீர் உள்ளிருந்து பீறிவர
அப்பப்பா சுதந்திர அழகுபயிர் வளர்கிறது
தப்பாது தண்ணீரைத் தான்விட்டு வளர்க்கவில்லை
எப்போதோ பாரதி எடுத்தியம்பி உயிர்விட்டான்.
சுதந்திரப் பயிரென்னும் செங்கமலப் பூவதனை

நிதம்நிதம் செந்நீராம் நசுகுருதி தனையூற்றி
செந்தமிழ்ப் பற்றினிலே சாகும் விதைமுளைத்து
இதமாக அட்டிப்பல இலையடுக்கி அனற்பிழம்பாய்
விதவித வேங்கைகள் வேட்டினிலே பூமலர்ந்து
இதந்தரு தமிழீழ இனியநற் பூங்காவாய்
பதங்கூறும் நிலையின்று பாரதிக்கு விழாவெண்பாம்

பெண்ணடிமை விலங்கொடிக்கப் பிறந்திட்டார் பாரதியார்
பெண்ணவள் ருதுவாகிப் பூப்புனித நீராடி
வண்ணமாய்த் தோன்றிவிட்டால் வருகுதுபார் காற்கட்டு

மண்ணினிலே நாற்குணமும் மலிந்தபொற் பாவையென்று
கண்ணியமாய் நடக்கக் கால்நீளப் பாவாடை
உண்ணானைப் பள்ளியிலே உன்நேரம் கழிக்கவேண்டாம்.
கல்வியினை கற்கவேண்டாம் கனமிடுக்காய்த் திரிய
வேண்டாம்
நல்லவளாய் கல்விகற்று நாடுப்பணி அலுவலராய்
வல்லவளாய் வாய்திறந்து வாசமொழி பேசவேண்டாம்
கல்லானா லுங்கணவன் புல்லானாலும் புருஷனெனச்
சொல்லுகின்ற வாசகத்தைச் சீர்தூக்கி மதிப்பளித்து
நல்ல வரனையிங்கு நாடித் தெரிவதற்கும்
இல்லாத பெருந்தடைகள் இருக்குதுபார் இம்மண்ணில்
எல்லாமே ஏதடைகள் என்னசெய்வாள் பெண்ணங்கு

கட்டிவைத்த கணவன்றன் காலடியிற் சிக்குண்டு
பெட்டிப் பாம்பாகிப் பேசும் திறமற்று
வட்ட முகமும் வடிவழகும் கெட்டழிந்து
இட்டசுதந்திரம் இவையும் உருகுலைந்து
ட்ட மரமாகிப் பாரினிலே வாழ்வோர்சிசும்
சிட்டான தாய்க்குலத்தின் சீரழிவைக் கண்டுமனம்
கொட்டிக் குமுறிக் கொந்தளித்த பாரதியின்
பொட்டான பாவதுதான் பெண்ணடிமை பாவென்பாம்
இட்டமுள்ள பாவதனின் இனிய கனவின்று
மொட்டாக மலர்ந்து முழுநினைவும் நனவாகி
சமத்துவம் பேசிச் சமரினிலே தலைநிமிர்ந்து
இமயத்தின் சிகரமென இந்நிலத்தில் ஓங்குதென்பாம்

புரட்டாதி மாதம் புதுநிலவும் வருகுதிங்கு
திரட்டிய சத்தியவள் திருவிழாவும் வருகுதிங்கு
முரட்டு மனிதர்தம் மனமதுவும் சமயமதில்
இரட்டை மனமின்றி இதயத்தால் லயிக்குதுபார்
முத்தேவி யாருக்கும் மனமினிக்கப் பாயாத்துத்
தித்திப்பாய்த் தந்த திரவியந்தான் பாரதியாம்

பாரதி மறைந்துவிட்டான் பாவின்னும் மறையவில்லை
ஆரமாய் அவன்தந்த அழகுக் கவிதையெலாம்
சீரழகாய் இசைபரப்பிச் சிந்தைகொள ஈர்க்குதுபார்.
காரணம் நவீனகாலக் கண்ணோட்டம் பாரதிக்குச்
சேர விழாஎடுக்கும் சீர்தூக்கும் நிலையென்பாம்.
சாம கானத்தில் சிவனுடைய வடிவங்கள்
தாமதில் மெய்மறந்து தன்கருணை யருள்நல்க
தாமக்கல் பாரதியின் நல்ல கவிதைபல
பூமகள் நாமகள் போர்மகள் துர்க்கைக்குத்
தேமதுர இசைநல்கித தெவிட்டாத அருள்சேர்த்துப்
பாமர மக்களையும் பக்தியிலே திளைக்கவைத்து
நால்வர் திருமுறைகள் நல்லாழ்வார் பாசுரங்கள்
நூல்கள் தரும்சிறப்பில் நயக்கும் திறம்போல
சால்பினில் அன்னைக்குச் சாற்றும் வடிவங்கள்
பால்போலக் காட்டிய பாரதியின் பாஇன்று
கோல்மாறிக் கோன்மாறிக் கனயுகங்கள் சென்றாலும்
ஆல்போல் விருட்சமென அழகு நிலாவென்ன
நன்னயமாய் நவீனகாலம் பொன்மயமாய் பாடுதுபார்.
பழந்தமிழன் பண்பும் பராக்கிரமும் வீரமும்
குழந்தைச் செல்வத்தின் கரத்தில் தவழுமென்ன
வழங்கிய கவிதைபல வாழ்வின் விடிவலைகள்
காலையிற் படிப்புப்பின் கனிவு தரும்பாட்டு
மாலையில் விளையாட்டென வழக்கஞ் செயும் வண்ணம்
சாலையோ ரத்தினிற் சாற்றிய கவிதைகள்
பொய்கூறல் புறங்கூறல் பண்பற்ற செயல் நீயும்
தெய்வத்தின் துணையுடனே தினமன்பு தனைச்செலுத்தி
வையத்துள் வாழ்வாங்கு வாழுக எனக்கூறி
சலனமற்ற நீர்போன்ற இளம்குழந்தை யுள்ளத்தில்
புலனுணர்வு அடக்குநிறை பொன்னான விதைபரப்பி
நலமான கவிதந்த நற்கவிஞன் பாரதியாம்.
தமிழெனும் மொழியெங்கும் இனியுயர்வு கொண்டதென
அமிழ்தான கவிதந்து அத்தாயை வணங்கென்றும்
அன்னம் பசு ஆடு அனைத்துப் பிராணியிலும்
உன்னன்பைச் செலுத்தி உயிர்க்கொலைகள் புரியாது

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தயவுடனே நேசியென்றும்
அஞ்சியஞ்சிச் சாவதிலும் அஞ்சாமற் பாதகரை
நெஞ்சில் உரத்துடனே நேர்மைத் திறத்துடனே
மிஞ்சிவிட்டால் மோதி முகத்தில் உமிழ்ந்தவரை
வஞ்சந்தீர்த் துன்றன் வாழ்வில மகிழ்களன்றும்
கொஞ்சுமொழிப் பாக்களால் குதலைமொழிச் சிறாருக்குச்
செஞ்சொற் கவியாத்தான் செந்தமிழன் பாரதியாம்.
பிஞ்சு உள்ளங்கள் படித்திவற்றைப் புரிந்துகொண்டு
வெஞ்சமரில் தலைநிமிர்ந்து வீறுநடை போடுகின்று.
நாதிகெட்ட சமுதாய நல்லுணர்வில் இணவெறியாம்
சாதிவெறி இம்மண்ணில் சாவதற்கும் பாட்டெடுத்தான்
நீதிநடு நிலைநேர்மை நிம்மதி யென்றிவற்றைப்
பாதியிலே யுணர்ந்து பாயாத்த பாரதியே !
ஓதிய பாடல்களின் உண்மைச் செயல்வடிவம்
மேதினி தமிழீழ மிகையொலியிற் கேட்குதையா.
கூட்டங்கள் கூடுவதும் கோஷம் எழுப்புவதும்
நாட்டிற் சுதந்திர வாஞ்சையை மூட்டுவதும்
ஆட்டப் படும்பாம்பாய் அடிமையாய் இருந்தோயரை
தீட்டிய கொள்கையில் திரண்டிட வைப்பதுவும்
பூட்டிய சிறைக்குள்ளே பொசுக்கி யழித்திடினும்
ஈட்டுவோம் சுதந்திரம் என்றபே ருண்மையினைத்
காட்டிய பாவதன் காலம் இன்றெனை
சட்டம் இருட்டறையைச் சாகடித்துச் சுதந்திர
மொட்டு மலர்ந்திட மான மதுகாக்க
வெட்டிக் கொல்லினும் விரட்டி யடிக்கினும்
சுட்டுச் சிதைத்துச்சித் திரவதைகள் செய்திடினும்
பட்டுமாய் தாலும் பரம்பரை யழிந்தாலும்
எட்டும் சுதந்திர ஏணியில் ஏறியே
கட்டான தமிழீழக் காதலிற் கட்டுண்டு
அட்டி பலவேறி அனற்பிழம் பதுவென்னச்
சுட்டெரிக்கும் நாள்பார்த்துச் சுடர்விட்டுக் கொதிக்கிறது
பாரதியை,

புரட்சிக் கவியென்பாம் போதாமற் சொல்லவில்லை

புரட்சி வெடித்துப் புதுப்புயலாய்ப் பண்தமிழன்
இரட்டிய சொத்தைத் திரும்பவும் தமிழீழ
மானம் ஒன்றென மனததினிற் கொண்டு
பூனைகளல் லர்தமிழர் புலிநிகர் மாந்தரென்ன
வானைப் பிளக்க வளர்ந்தோங்கு கின்றதென்பாம்.
சமயக் கவியென்பாம் சாந்தமுறு பாடல்கள்
அமைய மனத்தினிலே அழகாய் இசைபரப்பிக்
கமகம என்னக் கருணை வெள்ளத்தில்
மமதையைப் போக்க மலர்ப்பாவாய்ந் திகழுதென்பாம்.
சமூகக் கவியென்பாம் சாதிவெறிச் சாக்கடையை
உமிழ்ந்து உணர்வலைகள் உள்ளக் குமுறுலதாய்
அமிழ்தாக ஆன்மத்தில் அள்ளி இறைத்தின்று
சமத்துவ ஒற்றுமையின் சிகரத்தில் வைக்குதென்பாய்.
இலக்கியக் கவியென்பாம் இதயத்திற் பாஞ்சாலி
கலக்கிய பாரதக் கதைதன்னை அழகாகத்
துலக்கிய பாவெல்லாம் தூய மனத்தினிலே
விலக்கவொண்ணா இருந்தாக வாசம் சேர்க்குதென்பாம்
வந்தே மாதரம் வாயாரப் பாடிய
செந்தமிழ் பாரதியின் சீர்க்கவிக ளெல்லாம்
பட்டிதொட்டி யெங்கும் பறைமுழக்கி யின்று
வெட்டிய அந்நியன் வேஷம் கலைத்து
கண்டிடும் நவீன காலக்கண் ணோட்டக்
கண்ணாடி யாகக் கண்ணில் துலக்கி
மண்ணின் தீர்க்க தரிசியாய் மிளிர்ந்து
படித்த மக்களும் பாமர மக்களும்
துடிப்பாய்க் கேட்டிடத் தூய கவிதையாம்,
விடியலை வழங்கிய வித்து இதுவென்பாம்.
என்னையிங் கழைத்த ஏந்தல் அரசதிபர்
அன்பான செயலாளர் அணிவிழாக் குழுவினர்க்கும்
இன்போடு கவிகேட்ட இனிய சபையோர்க்கும்
நன்றிபல கூறி நயந்துவிடை பெறுகின்றேன்.

—:—

# விலையிலாத் தமிழின விடியலில்

# திலீபன்.

ஓ திலீபனே !

உன் பாதச் சுவடுகள் பாதைகளை வகுத்தன.
பாதைகள் ஆயிரம் பாமாலையாய் வந்தன.
சோதனையின் சொரிவிலே சுவைத்த அகிம்சையெம்
வேதனையின் விளிம்பிலே வித்தாக முளைத்தன.

சரித்திரம் கண்ட சந்தன மரங்களைப் பார் !
சந்தன மரம்போற் செவ்வொளியை வீசும்
செந்தமிழ் மெழுகுவர்த்திகளைச் சிந்தனை செய்துபார் !
— அந்தத் தியாகிகளில்

உன்றன் வடிவம் மட்டும்
செந்தமிழ்த் தாயின் சிரிப்பினில் ஒளிர்ந்து
எந்த விடங்களிலும் எழிற்பூசை செய்யும்
விந்தைமிகு அழகினைப் பார் !

ஆதனம் ஈழமென ஆயிரமாயிரம் உயிர்கள் அழிந்தன - அந்த
ஆயிரமாயிரம் உயிர்களிலும் ஆளவழிகாட்டி நீயென்று
- நின்னுடலை

ஆசனத் திருத்தி அருங்கோயிலாக்குவித்துப்
பூசனை புரிவதைப் பார் !

சந்தன மரங்களிலே உன்றன் வாசனை மட்டும்
இன்மணம் சேர்ந்து ஈழத்துப் பொன்மணமாகத்
திகழ்வதைப் பார் !

உண்ணாவிரதம் உன்வழி நடந்து
மண்ணிலீழ மக்களின் எழுச்சி
புண்ணிய வடிவமாய்ப் புதுப்புது வருடத்தில்
எண்ணியே செய்யும் எழுச்சியைப் பார் !

மலர்மாலை யல்ல மக்கள் மனமாலை யுன்றனுக்காய்ச்
சலனமின்றிச் சாத்தும் சுந்தர உள்ளங்களைப் பார் !

மரண மறிந்தும் மனத்திடங் கொண்டவன் நீ
சரணம் பாடிச் சாத்விகம் தன்னைத் தருணத்தில்
முரசறைந்தவன் நீ.

அஞ்சி யஞ்சிச் சாகும் அவனியிலே - நீ ஓர்
அஞ்சாத பொருள் என்ப தறிந்து விட்டார்.

இனங்காணும் இரங்கலுக்கு எதுவும் இயம்பாது
இதயத்தைக் கல்லாக்கி இருப்பதுவும் நீதானோ ?

ஆம் — நீ — இயம்பமாட்டாய். அது உனக்குத்தான் தெரியும்.
எது வரினும் தமிழீழம் வற்தாற்றான் எம்முடன் பேசுவாய்
- அன்றேல்

இதய மனத்தைக் கல்லாக்கி உதயதாரகையாம் ஈழத்தை
உள்ளாவும் எண்ணி யிருப்பாய் - இதனாற்றான்

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர மாவீழம் மலரட்டுமென்று
மனததாலே பொங்கி யெழுந்தாய் !

பன்னிரண்டு நாட்கள் பட்டினி கிடந்து
பட்டி தொட்டி யெங்கும் பறைமுழங்கினாய் !

போரினைக் கண்டு புறங்கண்டவன் நீயல்லை
வேரினில் அகிம்சை விழுதுகள் உண்டெனச்
சிரிதாய் உலகறியச் செய்தவன் நீஐயா !

அகிம்சை முரசம் அகில உலகத்தில்
புகுந்து பேசிப் பிரமிக்க வைத்தன.

சத்திய விரதமதைச் சாத்தி உலகினைப்
பித்ததா யாக்கிப் பெயரவைத்தவன் நீ

பாரதம் கண்ட நோன்பு பாலுடனே - நீயோ
நீரும் அருந்தாது நம்மின விடியலுக்காய்
நல்லூரான் வாயிலிற் கிடந்தவன்.

ஊரெழு தந்த உண்மைத் திலீபன் எங்கே
பாரதம் கண்டு பேசும் காந்தி எங்கே?

கவரிமான் கோலத்தில் நவஈழப் பொன்மானாய்
புவனத்தில் தன்மானம் பொங்கிடப் புகழ்ந்தாய்.

தலைவன் பிரபா தனிவழி நடந்து
அலைசேர் எழுச்சி அவனியில் வந்து
புலரும் ஈழப் பொலிவினைத் தருகென
நிலையாய் நிறுத்திய திலீப நின் தியாகம்
கலையாத் தமிழீழக் கொள்கையில் நின்று
விலையிலாத் தமிழரின் விடியலைச் சேர்க்கும்.

—:—

## வண்ணப் படுக்கையில்

# திலீபன்.

வண்ணப் படுக்கையில் வற்றாத அகிம்சையில்
எண்ணிய கொள்கையில் ஏற்றம் கண்டிட
மண்ணுக்காய் ஐந்து மாபெரும் கோரிக்கை
கண்ணதாய்த் தந்த காட்சியில் திலீபன்.

சிங்களருக் கோர்சட்டம் செந்தமிழர்க் கோர்சட்டம்
தங்கத் தமிழினத்தைத் தடுப்பு முகாங்களிலே
உங்கள்பயங் கரவாத உண்மையிலாத் தடைச்சட்டம்
தொங்கப் போட்டுநீர் துவட்டுவதை விடுத்து
இங்கவரை இக்கணமே இந்நிலத்தில் விடுகவென
எங்கள் தியாகி திலீபனவன் எடுத்துரைத்துப்
பொங்கும் தமிழர்க்காய்ப் போர்முழக்கம் செய்திட்டான்

வாரிசு வாரிசாய் வந்த தமிழர்தம்
பேரினைப் பரப்பிற் பூரண குடியேற்றம் ;
ஆரிதைக் கேட்க அதிகாரம் அவர்கையில்
ஓரிசாய்ச் சிங்களர்க்கு உகப்பான சட்டங்கள்,
வீரிய அஹிம்சையில் வீறுகொண் டெழுந்து
பாரிய கொள்கையிற் பார்த்திபன் வகுத்த
சீரிய கேள்வியிற் சிந்திய முத்துக்கள்
நேரதாய் நம்மினம் நிலைத்திட வழிசமைத்துப்
பூரணக் குடிபரப்பும் பூசலை விடுத்து
வேருடன் இற்றை வீசி யகற்றுக.

பயங்கர வாதம் பலபணி தடுத்திடும்
இயங்கியே மக்களைத் திகைக்க வைத்திடும்
மயங்கிநாம் மகிழ்ந்திட மாத்திரை இவையென
வயங்கிடு வகையினில் வேண்டு புனர்வாழ்வு
தயங்காமல் தந்திடும் தந்திர உபாயத்தை
வியங்கோள் வினையதாய் வேண்டுத லின்றி
நயங்கொள் இவைகள் நந்தமி ழீழத்தில்
இயங்கு இடைக்கால இயம்பீடு அரசு
இயங்க நிறுவ இயம்பீடு விரைக்கும்
உயர்வாய்த் தந்திடும் புனர்வாழ்வு தன்னை
நயமாய் நிறுத்துக நாட்டிற்காய் வினவினான்.

நீதி செத்தது நீசர்கள் நும்மால்
பாதியில் தமிழினம் பறித்திட வருகிறீர்
மீதியில் எமக்கென்ன மிஞ்சப் போகுது
வேதனை வேதனை விரக்தியும் வருகுது
சோதனை வேண்டாம் சுதந்திரம் வேண்டும்.

மாதர்கள் மண்ணிலே மடியவும் வேண்டாம்
சேதியாய்க் கலவரச் சிறுமைகள் வேண்டாம்
ஏதடா பொலிஸ் எமக்கேதடா காவல்
நீதடா உங்களின் திரவிய ஆட்சி
ஆதனம் தமிழீழம் அதுவேயெம் இலட்சியம்
ஆதவன் கிரணங்கள் அதுவெமக் குண்டடா
வாதிலா அகிம்சையில் வாகை நாம் சூடுவோம்
சோதிலா வார்த்தையைத் தூசெனக் கொள்ளுவோம்
மீதமா யுள்ள பொலிஸ்தலை மண்ணதில்
சாதனை செய்யமுன் கடிதியில் அகற்றுக
பூதலந் தன்னிலே போற்றும் அகிம்சையில்
பாரதங் கண்ட பரிவினைக் காட்டுவீர்
ஈதருங் கேள்வியைத் திலீபனும் இறைஞ்சினான்
வேதனை அவனுயிர் விண்ணகம் சென்றது.

அரிப்புலியின் சரித்திரத்தை வசைபாடி மாற்றுதற்குக்
கரிபூசும் கயவர்கள் கனக்கவுண்டு இம்மண்ணில்
காட்டிக் கொடுக்கும் காட்டு மிராண்டிகளை
நாட்டில் உமக்கு நயமாகப் பயன்படுத்தி
ஊட்டி வளர்த்து ஊர்சுரண்ட ஆயுதங்கள்
கூட்டிக் கொடுக்கும் கொள்கையினை நிறுத்துங்கள்.

பாட்டாளி பாமரரும் புாமிகாகத் தேடிவைத்த
தேட்டங்கள் எல்லாமே தினம்மறுகிச் செல்லுகின்றார்.
ஆட்டிப் படைப்பமென ஆடுகின்ற பாம்புகளாய்
ஊர்காவற் படையென்னும் உத்தமர்க ளிவர்வந்து
ஊர்சுரண்டி வாழ்வதற்கு உலகினையே அழிப்பதற்கு
சார்பாகப் பேசிடாநீர் சாக்கடைகள் இம்மண்ணில்
பேரகிம்சைப் பற்றதுவைப் பின்னும்நீர் கடைப்பிடித்தால்
தார்மீக சமுதாயம் தன்னிறைவு பெறுதற்கு
நீரவர்க்குக் கையளித்த நிலையற்ற ஆயுதத்தை
வேரோடு களைந்திடுவீர் வீணருக்கா யளிக்காதீர்
வாழுமென்றன் அகிம்சை வகுத்த விரதத்தில்
ஈழ விடிவிற்காய் என்னுயிரை ஈந்து
தோழர்க்காய்த் துணைநிற்பேன் துணிவான வார்த்தையிது.

ஐந்தம்சக் கோரிக்கை அவனியிலே தந்து
விந்தையாய்த் தன்துயிரை வேகவைத்த வள்ளலவன்
அகிம்சையினைப் போற்றும் அந்தப் பாரதமும்
அகிம்சைப் போர்வையில் அழுந்தும் சாக்கடையாய்

காந்தீயந் தன்னைக் காலிற் புதைத்து
வாந்தி யெடுக்குமென வணங்கும் திலீபனின்
சாந்தி சமாதான சந்தன அகிம்சையைத்
தீந்தமிழ் உணர்வைத் தின்று தொலைத்தது.

மேடைப் பேச்சில் மிகமுழக்கம் செய்கின்றோம்
மூடை மூடையாய்க் கவிதைமழை சொரிகின்றோம்
ஏடைப் புரட்டி எல்லாமே பேசுகின்றோம்
சோடை போகாது சுதந்திரம் என்கின்றோம்
நாடைக் காப்பீரென் நல்லதமிழ்ச் சொற்களினால்
நாடிச் சத்தியம் நயமாகச் செய்கின்றோம்
பாடையிலே போம்போது பரிதவித்துக் கண்ணீரை
ஆடையி னாற்றுடைத்து அழுதழுது விம்முகின்றோம்
கடிக்கும் எறும்பும் கண்ணீர்சிந்த வாயங்கு
வெடிக்கும் விம்மல் வீதிவரை கேட்கிறது
படிப்பு இவையென்னப் பாரதுவின் கதைசொல்லும்
வடித்த அகிம்சையில் வீறுகொண்ட திலீபனவன்
துடிப்புத் தமிழின் உயிர்த்துடிப்பு என்றிடுவோம்
முடிந்த கொள்கையில் முனைந்த இரங்கல்
விடிந்த ஈழமலர் விரும்பும் வினயங்கள்.

படுத்த திலீபனது பார்வையின் பரிவுளமே!
உடுத்த துணியும் இல்லாமற் போமிங்கு - அவன்
கொடுத்த வாக்கை நிறைவுசெய் யாதுவிடின்
அடுத்த வாரிசும் அழுதழுது விம்மலுறும்
கெடுக்கும் கயவர் கூட்டத்தை யிங்குபுலி
தொடுத்த போரினிலே துணைக்காய்நின்று
இடுக்கண் களைய இருளினை யகற்ற

நடுக்க மின்றி நாளைய உலகம்
எடுப்பாய்ப் பேசி ஏற்றம் காண
விடுப்பீர் வேங்கையின் வீச்சத்தி லும்மை

மாங்குளம் கொக்காவில் மணலாறெங் கெங்கும்
ஆங்காங்கு வேங்கைகளின் ஆன விசையினால்
தாங்காது தகர்ந்து தவிடுபொடி யாயின
பாங்காகக்கூறிப் பலபெருமை பேசியிங்கு
வீங்கி வடிந்து வீராப்ப விளம்பாது
ஆங்கிலேயன் அந்நியனி அடுத்தவனும் அந்நியன்
தீங்காக் கொண்டு தனிநாடு பெறுவதற்கு
தூங்கி வழியாது திலீபனது தாகத்தை
ஓங்கி உயரவைக்க ஒளிருணர்விற் புதுமலர்க்காய்
நாங்கள் விழித்திருந்து நயமாக உழைத்திடுவோம்

# மாவீரர் நினைவு

சங்கர் சுரேஸ் சுந்தர நாமம்
எங்கும் இவன்றன் எழிலுறு படங்கள்
பொங்கு தமிழின் புதிய வரலாற்றில்
அங்கம் பதித்த ஆண்மை முதலோன்
இங்கிவன் பின்னே சீலன் ஆசீர்
அங்கொரு ஆனந்த் அவனது பின்னே
திங்களாம் செல்லக் கிழியெனும் அம்மான்
சிங்களக் காடையர் சிறையினிற் புறோக்கர்
மங்கிடாப் புத்தூர் மாமா இவர்கள்
தங்க ளுயிரைத் தந்தனர் தமிழ்க்காய்

துண்டுப் பிரசுரம் துணிவாய்க் கொடுக்கக்
கண்ட காவற் படையது சுட்டு
ஏண்டகு ராஜ்மோகன்னெழி லுயிரைக்
கொண்டது வாயில் கதறிடத் தமிழ்த்தாய்.

அமல்பணக் காரன் செல்வன் ரகுமான்
சமர்செய் ஸ்ரீபன் ரஞ்சன் அலெக்சுடன்
இமையா வாசன் சஞ்சீவி நிக்கி
தமதுயிர் தன்னை தமிழ்த்தாய்க் காரமாய்
தீசன் எட்வின் ராஜா ரவியொடு
மாசறு அன்சார் மலைநிகர் றோம்சிவா
ஈஸ்வரன் இளசிவம் தேவன் புவியெண
ஓசையாய்த் தமிழ்க்கு உயிரைக் கொடுத்தனர்

புவிநிசா மைங்கரன் கடாபி நிதியுடன்
நவில்காண் டீபன் அன்சராஸ் தீசன்
கவின்றிடு மேசச் கனலென இடிஅமின்
செவியினிற் றுளைத்திடச் சாவை யணைத்தனர்

பண்டிதர் நேரு கரட்டிரவி ராஜீவ்
வெண்டிடு சாமீதவம் பீரிஸ் ஜெரரட்
அண்டிய எதிரியை அடக்கும் சைமன்
தெண்டிகள் வாயிற் றீக்கிரை யாயினர்

கென்னடி காந்தி வேதா காத்தான்
முன்னடி பாயும் மயூரன் சொனியுடன்
பின்னடி வையாச் சங்கரி மகாலெனப்
பொன்னடி தமிழ்த்தாய் பூவென உதிர்ந்தனர்

சுதாவுடன் கமலவன் திலீபன் தம்பி
பாதம்புய பட்டாபி நித்தி சபேசனும்
இதாளம் தின்னல் என்றெழு நாதன்
பதமிலர் பிடியிற் பசிக்கிரை யாயினர்

குட்டி தேவுடன் குமார் பயாஸ் கைலன்
மட்டிலா இன்சூர் ஈஸ்வரன் கபிலும்
சுட்டிடு நந்தன் சிறுகலைச் செல்வன்
மொட்டுமது மாணிக்கம் மரியா நந்தன்
இட்டமுறு ஈழ இசைந்திடு போரில்
கட்டனல் கக்கிக் கருக்கினார் உயிரை

பெண்புலி போரிற் புதுப்புலி யாகி
மண்ணதிற் சரித்திரம் மடையெனக் காட்டி
விண்ணதை யடையினும் வாகையில் வாகையாய்

எண்ணிய உலக எழுச்சியின் வடிவமாய்ப்
பண்ணிய செயல்கள் பாரினிற் புதுமையே.

மாலதி யென்பாள் மகளிர்க் குணர்த்தும்
கோல மகளிரின் குறிப்பு வழிகாட்டி
ஆல விடமெனும் அணைத்திடு சயனைட்
சால அருந்திச் சடிதியில் மறைந்தவள்

ஆயிர மாயிரம் வேங்கைக ளாயைந்
தாயிரம் வேங்கையும் அவனியில் மடிந்து
பாயிரம் பாடிப் புதுமலர் தூவிக்
காயினிற் கனன்றதைக் கண்ணீரில் நனைக்கத்
தாயவ ளாயிரம் தனயரை மகளிரைத்
தாயகந் தன்னிலே தாமிழந் தோமென
வாயினிற் கதறி வயிற்றினி லடிக்கப்
போயினர் போரினிற் புகழுடம் பாக்கி

கப்டன் தளபதி கனலுறு வேங்கைகள்
லெப்டினன் என்ன லாவக யுக்தி
தப்பாமல் தாங்கும் தனயர்கள் இவர்கள்
எப்பவும் தமிழன் ஏற்றம் தன்னைச்
செப்பியே சங்கெனச் சீறிடும் புலிகள்
துப்புத் துலக்கும் துணிவும் வீரமும்
கொப்புளித் திருக்கக் கொண்டகுறி வைப்பர்

பருதி வருமெனப் பகலவன் ஒளிக்காய்க்
குருதியும் உடலும் கொடுத்தவர் கொள்கையில்
கொட்டிய இரத்தம் குருதிவடு விதைமுளையாய்
அட்டி பலவடுக்கி அனற்பிழம்புச் சுவாலையதாய்ச்
சுட்டெரிக்கும் நாள்பார்த்து சுடர்விட்டுக் கொதிக்க
மட்டிலா மனவுறுதி மலைபோலக் கொண்டு
எட்டிய எதிரியை ஏதடா தமிழ்மாந்தர்
கட்டிக் காத்த கவினுறு நிலத்தினைத்
தொட்டிட உனக்குத் துணிவுண் டோவெனக்
கிட்டநில் லாதுகரும்புலி கடற்புலி
ஒட்டியே வேட்டலை ஒவெனச் சொரிந்து
கொட்டிக் குமுறிய கண்களின் தீப்பொறி
இட்ட செந்தணல் இவையென வாங்கு

பட்ட புகார்மலைப் படங்கள்மா வீரராய்
தெட்டத் தெளிவாய்த் தமிழன் உணர்வினை
வெட்ட வெளிச்சத்தில் வீச்சமாய்க் காட்டின,

மொட்டுகள் விரிந்து மலராகிக் காயாகிக்
கட்டான கனியாகிக் கழிக்காமற் காயினிலே
பட்டுப் போயினபார் பரதேசி அந்நியரால்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மைதரும் சுதந்திர மாவீரர்
நட்ட விதைகள் நம்தமி ழீழமண்ணில்
ஒட்டும் படங்களிலே ஒளிவிளக்காய்ச் சுடர்பரப்பி
விட்ட பணியதனை விரைந்து செயற்படுத்தத்
தட்டி யெழுப்பித் தலைநிமிரச் செய்கிறது
இம்மாவீரர்

உலகம் வியக்கும் கெரில்லா இயக்கமென
உண்மைச் சொரூபம் உணர்த்திய அமலர்
கரும்புலி மில்லர் டாம்போ போர்க் இவர்
பெருங்களந் தன்னிலே பாதையை வகுத்து
நெருடியே அரசின் நினைவினைக் கலைத்து
உருத்தெரி யாமல் தென்றலிற் கலந்தோர்

பிஞ்சு உள்ளங்கள் பால்வடியும் வதனங்கள்
வெஞ்சமர்க் களத்திலே வீணாரை யடக்க
நெஞ்சை நிமிர்த்தி நீண்ட துவக்கேந்தி
விஞ்சுபோர்க் கலைகள் விந்தையுடன் கற்று
துஞ்சும் தமிழினத்தின் துயர்துடைக்க நடைபயின்று
எஞ்சிய சயனைட் குப்பி இவரேற்றுக்
கொஞ்ச வயதினிலே கலைஓ வியங்களென
மஞ்ச மலரணையில் மாதுயிலாய் உறங்குவது
மிஞ்சும் தமிழினத்தின் மனத்திரையை மாற்றாதோ?
இக்கலையோவியங்கள்

காட்சிப் பொருளல்ல கண்டவர் நினைத்து மீட்சி
யடைய மேதினியில்
பட்ட மரங்களல்ல பார்த்தவர் கண்டு இட்ட கண்
களை இங்கிருந்தகற்ற
வானதை நண்ணிய வேங்கைக ளல்ல
மோனமாய்த் தமிழன் மனத்தினைக் கணிப்போர்

விண்ணை யடையும் பித்துக்க ளல்ல
மண்ணைக் காத்த சொத்துக்க ளாமிவை
உணர்ச்சி யற்று உணர்வழி சடங்களும்
உணர்வு வந்து உறுதுவக் கெடுப்பர்

கடல்களாய்ச் செந்நீர் களத்தினி லிறைத்து
உடல்கள் கருகி உயிரினைக் கொடுத்தோர்
விடலைப் பருவம் விதைத்த விதைகள்
உடலை யுருக்கி உணர்வைக் கொடுக்கும்
அடுத்த வாரிசுக் கான சுதந்திரம்
கொடுத்திட வேண்டிக் களத்தினில் மடிந்தோர்

பாலையும் தேனையும் பருகிப்பஞ் சணையில்
சாலவே யுறங்கிடும் சலதிக ளல்ல
ஓலம் இட்டு உணர்வைச் செலுத்திய
சீலச் செம்மற் செயற்றிறன் சிற்பிகள்

துயிலாய் உறங்கும் தூபிகள் அல்ல
பயிலும் பாடப் புத்தக நூல்கள்
நெஞ்சினில் நெருப்பை நினைவில் தாகத்தை
அஞ்சிடா உறுதியை அளித்த சுடர்கள்

தியாக வேள்வியில் தீக்கிரை யாகி
மயான மண்ணில் மலர்ந்தன விதைகளாய்

நெருப்பினிற் குளித்து நாட்டினைக் காக்க
விருப்புடன் வந்த வேகப் புயல்கள்

காற்றுடன் கலந்து கானம் பாடும்
ஆற்றல் மிக்க அருங்குயில் இவர்கள்

நாளைய சந்ததி நலமுட னிருக்க
வேளையில் வேங்கையாய் விதைத்த விழுதுகள்

விழுப்புண் பட்டும் வேகக் கதிராய்த்
தொழுப்புண் ணகற்றத் துணிந்த தனையர்

இந்நூற் றாண்டின் இணையிலாத் தலைவன்
தந்த குன்றுகள் திரண்டு பொசுக்க

தயக்கம் என்ன தாயகம் காக்க
இயக்கம் வாவென் றியம்பின இவைகள்

வரலாறு போற்றும் வழிகாட்டி யாமெனத்
திரளாய் மக்களைத் திரட்டும் திசைகள்

வாழ்க் கை யென்னும் தத்துவா சிரியனை
வரைந்து காட்டிய விண்ணகச் சுடர்கள்

தேற்றுவரை வாழ்ந்த வாழ்வினை நெருப்பில்
நீறாய் எரித்து பொசுக்கிய நரம்புகள்.

சோற்றுக் காகச் சுதந்திரம் விற்ற
சோம்பல் என்னும் சுருதியை அழித்தோர்

இயற்கை தந்த இன்னல் யாவும்
முயற்சி தன்னால் முழுமையாய் வென்றோர்

மாவீரன் மாவீரன் மாவீர னென்ன
மனத்தாற் போற்றும் மாவீர ரிவரைப்
பூவீர ரென்னப் போற்றிப் பூசித்துப்
பூதலந் தன்னிலே யவர்பணி சமைக்க

போராளி தந்த புனிதப் பணியில்
மாதுயில் கொள்ளும் மஞ்ச மலரில்

நெருப்புக் கிடங்குகள் நிமிரும் சுடர்களாய்
விருப்புக் கொண்ட தற்கொடைப் படையின்
கருவின் தாகமாம் தாயகம் மலர
பெருத்த மார்பன் பிரபா அணிக்கீழ்
உரத்த தமிழா உணர்வில் உன்னை
இருத்த வேண்டி இனிதமர் கின்றேன்.

**கேணல் கிட்டு அவர்களின் மறைவை யொட்டி வட்டுக்கோட்டைக் கிராம முன்னேற்றச் சங் கங்களதும் பொதுமக்களதும் சார்பில் வெளி யிடப்பட்ட கவிதை**

காலை யிழந்தும் கடமையிற் றமிழன்
காதலை மறக்காத கிட்டுவே - நவவீரர் வேங்கையுடன்
சாலையிற் படகில் சரேலென ஏகிடச்
சண்டாளர் வலையிற் சிக்கவோ.

வலது கையென வேங்கையின் வரையென
வலம்வந்த தமிழரின் ஒளிவிளக்கே - ஈழம்
மலரும் வேளையில் நவகரும் புலியும்
மான மறவநீயும் மடியவே.

தாகம் தமிழீழம் பருகத் தருவாயென்ற இவர்தவிக்கச்
சோக கீதம் கேட்ட தையா சோர்ந்து வீழ்ந்தோம்
தமிழர்யாம்

இந்திய அரசே இந்த அநியாயம் ஏதடா
வந்த கிட்டுவை வழிவிட மறித்தழித்தாய்
அந்த ஒன்பது வேங்கைகளையும் அழித்தாய்
உன்றன் கபடம் உலகு அறியுமடா
இந்த அநியாயம் இனியுனையே சாருமடா.

சதிச் செயல்கள் நீபுரிந்த சாக்கடையை அழிக்கவெனக்
குதிக்குதடா குமுறலெலாம் கொப்பளித்துப்
பொங்குதடா
பதியிழந்த நெஞ்சமெனப் பதைபதைக்க வைக்குதடா
மதியிழந்தாய் இந்தியனே மடியநீயும் கனநாளோ!

கடற்புலிகள் அருகிருக்கக் கப்பலில் வந்தகிட்டுவே
உடல்கருகி யுனையின்று உலைக்களத்திற் பொசுக்
கினன்யார்?
கடல் பொங்கி யெழுந்தவனைக் கட்டோடு சாய்க்
குமையா!
கடற்புலிகள் விதைமுளைத்துக் காலமெல்லாம்
அழிக்குமையா

# கரும்புலி நினைவு

கரும்புலி யொன்று காவியம் படைக்கும்
காலமும் வந்தது ஏன்?
பெரும்படை யொன்று பாசத் தமிழீழப்
பாதையில் வந்தது ஏன்?

நீலக் கடலினில் நீந்துப் படகினில்
நல்லுயிர் மாய்த்தது ஏன்?
ஓலக் குரலதன் ஓசையில் வந்தது
ஓயா உணர்வினிலே

எதிரிகள் சூழ ஏறிய கோட்டையை
ஏற்றிப் பிடித்தது ஏன்?
அதிரடிப் படையின் ஆக்கிர மிப்பினால்
ஆவேசம் கொண்டதும் ஏன்?

தரைகடல் மீதினைத் தாவிப் பிடித்தே
தாயகம் காத்ததும் ஏன்?
விரைவிற் தமிழீழம் வென்றிட என்று
வேதனை கொண்டதும் ஏன்?

வானத்தாற் குண்டுகள் வாரியிறைத்திட
வற்றும் தமிழினத்தை
மானக் கரும்புலி மாவீர ராகியே
மண்ணினிற் காத்திடவே!

பல்லவி

வணங்குநம் திலீபன் வாழ்வின் இலட்சியம்
வகுத்திட வாரீரோ - இந்நாளில் (வணங்குநம்)

அனுபல்லவி

சுதந்திரம் தானெனில் பதந்தந்த திலீபன்
விதந்தனை விளம்பிட வீரரே சேர்வீர் (வணங்குநம்)

சரணம்

வெடிக்கட்டும் மக்கள்தம் வருபுரட்சி மேலாய்
கொடியது பறக்கட்டும் தமிழீழம் மலர்ந்திடத்
துடிப்பினில் விரதனாய் தன்மானத் தமிழனாய்
மடிந்தனன் மாவீர மக்களில் மாணிக்கமாய் (வணங்குநம்)

நீரா காரமுதல் நேருமெவ் வுணவையும்
ஓரா திருந்துளம் ஓங்கிய கொள்கையில்
பேரான தமிழரின் பூசனைத் தெய்வமாய்
சீரான வழிகாட்டி சேர்ந்தனன் ஓவியமாய் (வணங்குநம்)

பல்லவி

அன்னம்நீர் ஏதுமின்றி உன்னை எமக்களித்து
மின்னும் உயிர் மாய்த்தனையோ - திலீபா (அன்னம்)

அனுபல்லவி

அன்னை அருகிலில்லை அப்பனை எண்ணவில்லை
நின்னுயிர் கருதாது நீடு தமிழென்றே (அன்னம்)

சரணம்

காந்தியும் கிறிஸ்துவும் கருதாத தியாகத்தை
ஏந்தி மகிழ்ந்துயிர் இன்தமிழ் ஈழமாய்
ஈந்த தியாகிநீ ஈழத்துக் காந்திதான்
சாந்தி சமாதான உலகிற்கோர் சோதரனே (அன்னம்)

வானத்தில் ஈழத்தின் வரலாறு பார்க்கின்றாய்
மானத் தமிழரின் முரசத்தைக் கேட்கின்றாய்
தானமாய் உயிரீந்து தந்த கனவுகளை
ஆனதுயர் தீர்க்கும் அகில மிதிலேநீ (அன்னம்)

# தூபமாய் தூவியே தூங்கினாய்!

திலீபா தியாகி தெரியாத – இந்தத்
தேசம் நனைவது புரியாதா?
சிலையாய் நீயும் இருப்பாயா – செழுமை
சேர்ஈழம் காணப் பிறப்பாயா? மீண்டும் பிறப்பாயா?
(திலீபா)

பாரதப் பார்வையும் பண்பற்ற செயலும்
ஈரநெஞ் சினில் அகிம்சை விதைத்ததோ?
சார மீழமதைச் சால வடித்திட
சோரமாய்ச் சீவனை நீசிதைத்திடவோ (திலீபா)

வானத்து வாழ்வும் விண்மீனும் சேர்ந்துன்னை
வீசும் ஒழியிமின்னல் அழைத்தனவோ
மோன நிலையில் நின்று மானத் தமிழனாய்
மாவீழம் மலர்வதில் மகிழ்வதோ (திலீபா)

மக்கள் புரட்சியில் மாதமி ழீழமென
மாசிலா உளத்திலே நம்பினாய்
துக்க மின்றிமரணத் தேர்வினில் நின்னையே
தூபமாய்த் தூவியே தூங்கினாய் (திலீபா)

ஊரெழு மட்டுமல்ல உன்னீழத் தேசமெல்லாம்
உன் திருக் கோவிலெங்கும் ஒளிருதே
நீரா காரமேனும் நின்னுடல் பருகாது
நாராய்ச் சருகென துயில்வதோ (திலீபா)

## வாடையில் ஊறிய வாரிசு வேங்கை களானவம்மா

பூங்குயில் என்னப் பொழித்திடு வாழ்வினில்
புயலென வந்தது இனமத பேதம்
தாங்கிடு பொறுமையைத் தகர்த்தன இவைகள்
தன்மானத் தமிழன் தன்நிலை குழம்பினான் (பூங்குயில்)

நாடு கிடைத்திட நாமுனி கூடி
நயமுடன் போர் தொடுப்போம்
வாடிய பயிர்களை வளமுறச் செய்திட
வற்றாமல் நீரளிப்போம்.
தேடிய செல்வங்கள் தினம் தினம் அழிவதைத்
தடுத்தே தலைகொய்வோம்
ஆடிடு மாட்டத்தில் ஆற்றிடு வேஷத்தை
அழகாய்ச் செய்திடுவோம் (பூங்குயில்)

தினந்தினம் திவ்விய புருஷர்கள் தோன்றித்
திக்கெட்டும் சுதந்திரப் போரினை முழக்கிக்
இனமதன் விடிவை இகபர மீதில்
ஈரமில் உளங்களில் இடித்துரை செய்தனர்

மேடையிற் பேசிய மேன்மக்க ளெல்லாம்
மேதைக ளல்லவம்மா — இவர்
வாடையில் ஊறிய வாரிசு வெல்லாம்
வேங்கைக ளானவம்மா
கோடையிடி யெனக் குண்டுகள் பொழிந்து
கொடுமையை யடக்குமம்மா
காடைகள் பிடிதனிற் கலங்கிடும் ஈழத்தைக்
கவினுறக் காக்குமம்மா (பூங்குயில்)

## ஓங்கிய மொழியெங்கள் மொழியதே

தாயென இந்தத் தரணியி லேயின்று
தாங்கிய பயிர்கள் எத்தனை - இவை
காயினில் உதிரக் கருகியே ஈழக்
காதலை மறந்தே வாழ்வதா (தாயென)

மாபுக ழீட்டி மாமாதென வாழ்ந்து
மாண்புடன் நடந்திட்ட தாயவள் - இன்று
நாவினில் நமது நாயகி தன்னை
நவின்றிடப் பயந்தே வாழ்வதா? (தாயென(

கோவில் இவளெனக் கோசமுறக்
கொடுத்தநல் மொழியாளைப் போற்றுவோம் - எங்கள்
ஆவியில் அன்னை தமிழென நினைத்தே
ஆற்றிடு வோமவள் சேவை (தாயென)

கலியுக மீதில் ஒலியின்றி வரியில்
கண்டு இறந்த மொழிபல - இங்கு
ஒலியொடு வரியில் ஒழிவிடும் வடிவில்
ஓங்கிய மொழியெங்கள் மொழியதே (தாயென(

## சிறையினில் அடைந்திட்ட கிளிகள் இன்று சிறகது முளைத்து வான் பறக்க

சிறையினில் அடைந்திட்ட கிளிகள் - இன்று
சிறகது முளைத்து வான் பறக்க
கறையெனப் படிந்திட்ட வாழ்வின் - நிலை
கறைமிடர் அகற்றிட விரைந்தன சிறையினில்

அறையினில் அரசு அடக்கியே சிறையில்
இறைமையின் கொடுமை இதுவோ எனத்தர
நிறைந்திடு கொலைகள் நீதியே சாக
விறைத்திட உலகு விரும்பியே செய்தார் சிறையினில்

விண்ணதை நோக்கி விரைந்தன பொம்மர்
வேண்டிய மட்டும் பொழிந்தன குண்டுகள்
எண்ணமில் அரசு இயக்கிய கணைகள்
எங்களின் மருத்துவ மனையினைத் தகர்த்தன சிறையினில்

ஓரினம் சிறப்பாய் ஒழிர்விடத் தோன்ற
ஓங்கிய அரசு ஒழித்திட நினைப்பதோ
பாரினில் தன்னினம் பரப்பிடக் குடிதனைப்
பேரினத் தமிழன் பரப்பினில் அமர்த்தவோ? சிறையினில்

# எங்கள் வேங்கை இணையிலாப் பரணியை இசைவுடன் பாடுவோம்

வானம் சொரிந்தது வையகம் சிரித்தது
கானம் இசைத்தது கலையுளம் பொங்கிட
ஊனம் சிதையினும் உயிர்பிரிந் தோடினும்
மானம் ஒன்றே மறத்தமிழ் கொள்கையாம் வானம்

வீரர்கள் நினைவினில் விழாக்கோலம் பூண்டனம்
தீரர்கள் இவரெனத் தியாகநல் ஒளியெனச்
சோரம் பேசயினும் சுகந்தம் வருமெனத்
தாரம் எமக்கிலைத் துயரம் போமென வானம்

வேங்கை வீரர்கள் விரைந்தனர் பாசறை
ஓங்கு தமிழுக்காய் உணர்வினைச் செலுத்தியே
மாங்குளம் கொக்காவில் மணலாறு எனப்பல
தாங்கா அரண்களைத் தகர்த்தனர் தரணியில் வானம்

வண்ண வேங்கைகள் வெற்றியைக் கண்டு
எண்ணிலா நாடுகள் ஏத்தியே இயம்ப
மண்ணிலே யீழ மக்களும் புகழக்
கண்ணிலே ஒளிர்தரு காட்சியாய்க் கனிந்ததே வானம்

மதந்தரு கருணையை மதித்திடா மூடர்கள்
சதம்எமைச் சிதைந்திடச் சாக்கடை புழுவதாய்
உதவுவார் பிறரென ஊசலாடிட
விதந்திட வேங்கையும் விரைந்து வந்ததே வானம்

சங்கத் தமிழன் பரணியைப் பாடினும்
எங்கள் வேங்கை இணையிலாப் பரணியை
மங்காப் புகழுடன் மாபெரும் சரிதமாய்
இங்கு நிலைத்திட இசைவுடன் பாடுவோம் வானம்

## ஈழமே! ஈழமே! என்றுநீ வாராயோ!

ஈழமே ஈழமே என்றுநீ வாராயோ - நம்
ஈழமக்கட் கிழைக்கும் துயரை இன்றுநீ காணாயோ. ஈழமே

வாழ்வில் தமிழன் வகிக்கும் ஞானம்
வையகம் வேறுண்டோ – இன்று
வளர்க்கும் ஞானம் வாசம் குன்றி
விண்ணில் மறைவதோ தமிழ் ஈழமே

வேங்கை வீரர் வாழ்வு விட்டு
விண்ணிற் சேர்வதோ - அவர்
விரைந்து சென்ற பாதை யெல்லாம்
வாகை வராதோ தமிழ் ஈழமே

காட்டில் வாழும் விலங்கு யாவும்
கானம் இசைக்குது – இங்கே
நாட்டில் மலரும் சேய்கள் யாவும்
சோகம் இசைக்குது தமிழ் ஈழமே

வேங்கை காட்டில் வாழும் வாழ்க்கை
தமிழர்க் காகவோ - அன்றேல்
வெந்து வெந்து வளர்த்த வீரம்
விழலுக் கிறைக்கவோ தமிழ் ஈழமே

வீர மைந்தர் ஓசை கேட்டு
விந்தை பாடுது - உலகம்
கோரச் சாவின் ஒலியைக் கேட்டுக்
குமுறிக் கொதிக்குது தமிழ் ஈழமே

தமிழன் தாகம் தரணி யெங்கும்
ஈழம் தனது – இதைத்
தேச மெங்கும் முரசு கொண்டு
ஒலிக்கும் புவியது தமிழ் ஈழமே

# நேயங் காட்டி ஈழம் சேர்க்கப் பொன்னைக் கொடுப்பாய்

பொன்னைக் கொடுப்பாய் - பொருட்
குவியல் கொடுப்பாய் - எங்கள்
மண்ணுக் காகப் பாடுபடும்
மாவீரர் மாவீரம் பெற
பொன்னை

கன்னித் தமிழ்க் காரிகையின்
காதலை நீ வாழ வைப்பாய்
உன்னைத் தமிழ் ஈழத்திற்காய்
உயிர்த் தியாகம் செய்திடுவாய்
பொன்னை

வண்ணத் தமிழ் வாசனையை விண்ணிற் சேர்த்து வீரங்காட்ட
எண்ணங் கொண்ட அந்நியனின் எரிதணலை அணைத்துவிட
பொன்னை

கல்வியெனும் சாலையினைக் கல்லறையாய் ஆக்கி வைத்த
கொல்லுமந்தக் கயவர் தம்மின் கொட்ட மதை யடக்கவெனப்
பொன்னை

சேனையுண்டு தானையுண்டு சேர்த்தபெரும் அரசுமுண்டு
வானைப் பிளந்தேயலறும் வீரர்தமை விரட்டவென
பொன்னை

மானம் தமிழ் காப்பவர்க்கு மாநிதிகள் ஏதுமில்லை
தானம் நாங்க ளீயா விட்டால் தாயகந்தான் ஏதுவரும்
பொன்னை

அன்னை போற்றும் தம்பியனே அன்னை போலத் தமிழன்னை
நின்னைக் காப்பா ளென்றுணர்ந்து நேயங்காட்டி ஈழஞ்சேர்க்கப்
பொன்னை

## வேங்கை யென்றும் நீடு உயரவே உயரவே

வேங்கை யுயர ஈழம் உயர வேந்தன் பிரபாகரனாய் உயர
ஈங்கு ஈழம் காண இறந்த எங்கள் மாவீரர் இவர்கள் மகிழ — வேங்கை

நாட்டில் தமிழின் நாதம் சுவைக்க
நாளும் சுதந்திர வேட்கை மணக்க
பாட்டில் ஈழப் பசுமை கண்டு
பாரில் ரசித்துப் பார்த்து மகிழ — வேங்கை

குயிலும் இனமும் கூவிப் பாட
மயிலும் மானும் ஆடி மகிழ
துயிலும் காட்டு வேங்கை துள்ள
பயிலும் பண்ணின் பரதம் ஓங்க — வேங்கை

## தமிழன் திறம்பாடும் மணியிது

தொகையறா

அன்று கண்ட ஆதிக்கம் இன்று நிலை குலைந்ததம்மா
என்றும் எங்கள் இன்பத் தமிழ் இவ்வுலகில் வாழுமம்மா
ஈன்றுபசு இல்லாது கலங்கும் நிலை இல்லையென
வென்ற மணி ஈழமதில் வேங்கை தமிழ் காத்த மணி

பாட்டு

வேங்கைகள் வீர வெற்றியிற் கோட்டை
வென்ற சரித்திர நிகழ்வினை - இன்று
தாங்குநற் சான்றாய்த் தரணியில் தந்த
தமிழன் திறம்பாடும் மணியிது

ஆயிரத் தறுநூற்று நாற்பத் தெட்டில்
அவனியில் வந்த மணியிது - பெரும்
அந்நிய ஆதிக்க அரசினால் தமிழை
ஆட்டி யடக்கிய மணியிது — வேங்கை

வாயினைக் கட்டி வயிற்றினி லடிக்க
வேற்றான் கொணர்ந்த மணியிது – எங்கள்
தாயின் தமிழின் மதத்திற் சுதந்திரம்
தந்திடா தார்த்த மணியிது
வேங்கை

அந்நியன் அந்நியன் ஆதிக்க மதுவாய்
அடிமையாய் ஆக்கிய மணியிது – காலம்
சென்னியில் எழுதிய செழுமையை தமிழனாம்
சேர்த்த சுதந்திர மணியிது
வேங்கை

தேடிடு மீழத் தரணியின் தேசினைந்
தீங்குதந் தழித்த மணியிது – அன்று
பாடிடுங் குயில்களும் பார்த்து ஒடுங்கிடப்
பறையொலி செய்த மணியிது
வேங்கை

# நாடு - ஈழ - நாடு
# நாடு - ஈழநாடு - இது நாடு ஈழநாடு

ஏழை எளியோ ரென்று எண்ணாத கயவர்களே
வாழையடி வாழையாக வந்த தமிழ் மரபுதன்னை
கோழை யெனவே நினைத்துக் குலத்தினையே குலைக்க
மாளமடி வோமோ பார் மறத்தமிழ் வேங்கைகள் நாம்
நாடு – ஈழ – நாடு

போதிமர நிழலில் புத்தர் மொழிந்த தெல்லாம்
பேதைமையாய் போயினவோ பேச்சு வெறும் பேச்சே
நாதி கெட்ட நாயக்கர் நம்மை வந்து நசுக்குவதேன
ஆதி பூர்வ குடிகளெமை அடக்கி நீவிர் ஒடுக்குவீரோ
நாடு – ஈழ – நாடு

சோதனைக்கும் எல்லையுண்டு சோதித்திட இவர் யாரோ
பாதகர்கள் அரசோச்சும் பண்புசற்றும் அறியாரோ
ஆதிக்க அரசும்மாம் ஆண்மையைநாம் இழப்போமா
வாதிப்பதில் பயனிலையினி மானவேங்கை வழிநடப்போம்
நாடு – ஈழ – நாடு

அரசினை அமைக்கவோர் மக்கள் தொகை வேண்டும்
அதற்கொரு நிலப்பரப் பாங்கிருந்திட வேண்டும்
தரவினில் இறைமையும் திறம்பெற்ற நாடுகளின்
தக்கஅங் கீகாரம் கலாச்சாரம் பண்பு வேண்டும்
நாடு - ஈழ - நாடு

இத்தனை அம்சமும் இசைவாய் நிறைந்திட்ட
பத்தரை மாற்றுப்பொன் பசுந்தமிழர் நாங்கள்
வுத்திகள் கண்டோ னென்று ஜெகத்தவர் போற்றும் அண்ணல்
வித்தக னேபிரபா கரனே நீ வேங்கை தானே
நாடு - ஈழ - நாடு

எண்ணித் துணிந்தபடி ஏற்றம்நீ கண்டு விட்டாய்
திண்ணிய மனதுடைய திறற்றலைவன் நீயன்றோ
கண்ணிய மானவுன்றன் கவினுறும் ஆட்சி வந்தால்
மண்ணிலே ஈழ மக்கள் மாபுகழ் அடைகுவார்கள்
நாடு - ஈழ் - நாடு

## காலமெல்லாம் வேங்கை வெற்றி பார்த்திருப்போம்

நாளெல்லாம் ஈழம்வரும் நமக்கு நல்ல வாழ்வு வரும்
காளையெங்கள் கணவராவார் என்றிறு மாப்போம் - நாம்
காலமெல்லாம் வேங்கை வெற்றி பார்த்திருப்போம்
நாளெல்லாம்

நாதி கெட்ட நீசர் தம்மால் நமது ஈழக் கன்னியர்கள்
சோதனையின் சேற்றினிலே சேர்வதற்கும் எல்லையுண்டு
வேதனைக்கு விடிவுகண்டு வீசுமொரு சுகந்தம் கண்டு
காளை ............ என்றிருப்போம் – நாளெல்லாம்

பாசவலை பரிதவிக்க பாவையர்கள் அதிகரிக்க
ஆசைவிழி அழகரவர் ஆணழகைப் பார்த்திருக்க
தேசமெனும் தாகத்தில் திரண்டஅவர் தோளைக்காண
காளை ............ என்றிருப்போம் – நாளெல்லாம்

## வாரும் வாரும் நீர் தோழரே

வாரும் வாரும் நீர் தோழரே வேங்கை வாழ்வில் வீரரிங்கே
வெற்றியை நாடிடத் தோழரே – வாரும் வாரும் நீர்

எமது தோழரின் ஏற்றிடு கொள்கையில்
நமதாய் ஈழம் சொல்வாரே
உமது கரங்கள் ஓங்கிடு மன்று
உண்மையில் வெற்றியை உணர்விர் – வாரும் வாரும் நீர்

கனவு காண்கின்ற காட்சிகள் யாவும்
நனவில் நாம் பெறுவோமே
அனலென அணியில் அவனியில் இன்றே
இனமதன் விடிவினைக் காண்போம் – வாரும் வாரும் நீர்

## மாவீரரே நும் நினைவுகள் தூங்கவில்லை மாவீரரே

மாவீரரே • மாவீரரே – நும்
நினைவுகள் தூங்கவில்லை மாவீரரே
மாவீரரே – மாவீரரே

பிறப்பு திருமணம் இறப்பு இவையெல்லாம்
அறந்தரு வாழ்வில் ஒருமுறையே
உறவும் பந்தமும் உற்றார் பெற்றாரும்
உண்மையில் உமக்கில்லை மாவீரரே
மாவீரரே – மாவீரரே

சயனைட் அருந்தினாற் சாவது நிசமென்று
இயம்பியும் இயக்கத்திற் சேர்ந்தீரே
உயர்வாய் உன்நினைவும் உள்ளத்தில் வேதனையும்
துயருறத் தூபியைத் தொழுதிட இயம்புதே
மாவீரரே - மாவீரரே

கரும்புலி நெருப்புலியாய்த் தற்கொலைப்படையதுவாய்
பொருகளம் புகுந்து போக்கினீர் எதிரிகளை
அருமுயிர் தனையும் ஆங்கே அழித்தீரே
உருவினைத் தூபியாய் உணர்வினிற் தொழுதிடவே
மாவீரரே - மாவீரரே

## படைகள் திரள உடைகள் புலியாய்ப்போ

படைகள் திரள உடைகள் புலியாய்ப்போ
நடையில் வேங்கை நினைவிற் பாய்ந்துபோ
துடையும் தோழும் திரண்டு விம்மப்போ
அடையும் போரில் ஆக்கம் காணப்போ — படைகள்

வாடை வேங்கை வேகரத்தில் நீ
தாடை கழரத் தானை ஒளியத்தான்
ஊடறுத்து உண்மை வெல்லப்போ
காடை ஒழியக் காவல் காக்கப்போ — படைகள்

பொட்டை யிழந்த பூவை நானிவள்
கட்டை சேர்த்தார் கணவருடலினை
தொட்ட வாழ்வின் துயர் துடைக்கப்போ
சொட்டும் ரத்தம் சுகந்தம் வீசப்போ — படைகள்

படுகளத்திற் படையில் என்மகன்
கடுஞ் சமரிற் கணைகள் வீசியே
நெடும்புலியாய் நின்ற கதையதை
விடுதலையின் சரிதம் விளம்பட்டும் — படைகள்

# நாட்டின் தியாகிகள் வாழ்க நீரே

தொகையறா

இன்சூர் நந்தன் ஈஸ்வரன் கபிலும்
இன் தமிழ்ப் பாரி காரி கரிகாலன்
மன்னுபுகழ் சேரன் மரபின் வழியே

கலைச்செல்வன் கைலன் கலைத்தமிழ் விக்னேஸ்
விலைமிகு பண்டார வன்னிய னிராவணன்
விக்ர மாதித்தன் விளங்குபுகழ் மரபே

மதுவென்னும் மலரோன் மாணிக்கம் மரியா
முது தமிழ்ச் சங்கிலியன் கட்டப் பொம்மன்
பதுமைநற் பவளக் கொடியதன் மரபே.

பாட்டு (மாவீரர் பற்றியது)

எழுந்தது வீரம் எழும்புகழ் தானம்
கொழுந்தென கானம் கிழர்ந்தது மானம்
அழுந்தமிழ்மாந்தர் ஆக்கமே ஊனம்
குழுமிய தமிழர் குரலினில் வட்டூர்
முழுத்தமிழ் உலக மூச்சினிலே
கூடிய தோழர்களே?
உழுதுநீர் விதைத்த உணர்வுறு ஈழம்
உருவினைக் காண்கிலீரோ

எழுந்தது

இன்காரை நகர் இன்சூர் கப்டன்
புன்கட்டுவனில் புயலென நந்தன்
மின்மண லாறில் மிகையெனக் கசேந்திரன்
சுழிபுர வீரக் கபில்
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வாரீர்
சுகந்தத் தியாகிகளே!
விதந்திடு வட்டூர் வேங்கைக ளேநீர்
வீரநல் ஒளிவிளக்கே

எழுந்தது

மன்னார் மலையென மோது கலைச்செல்வன்
ஆனையிறவில் அனலெனக் கைலன்.
வானைப் பிளக்க விக்னேஸ் வீரன்
வழங்கிய வீரங்களே.

ஊனைக் குடிக்க உருவாய் வந்த
ஊனைச் சிதைத்தவர் நீர்
உயிரின் மேலாய்த் தமிழன் உயிரை
உயிராய் மதித்தவர் நீர் எழுந்தது

புல்லா வெளியிற் பொருத மதுவே
முல்லை நகரில் மிரட்டிய மரியா
எல்லையிற் கடற்புறா மாணிக்கம் ஈழம்
வெல்லும் நிலை படைத்தீர்
வல்லதோ ருங்கள் வாழ்வினை வெறுத்தே
வட்டு ரொடுவுலகம்
சொல்லுமோர் வீரர் சரித்திரம் புகழக்
சுதந்திரம் காண வந்தீர் எழுந்தது

தனயனின் வீரத் தாயும் தியாகியே
தனயனின் வீரத் தந்தையும் தியாகியே
தனயர் இவரெனத் தாயகம் புகழ
தருபுகழ் தனைத்தந்தீர்
மலையும் உலகும் மகிழ் வட்டுரும்
மனத்தால் மாலை தந்தார்
நினைவினில் நீங்கா நினைவினைத் தந்தநும்
பெற்றோர் வாழியவே
நாட்டினும் தியாகிகள் வாழியவே

# கேடு கெட்ட வாழ்விதுவோ கேள்வி கேட்கும் மாந்தர்களே!

மாடு போச்சு கன்று போச்சு
மாபுலமும் போச்சுதையோ!
வீடுபோச்சு வயலும்போச்சு
விளைநிலமும் போச்சுதையோ!
பாடுபட்ட சொத்தும் போச்சு
பாதையிலே அகதியாகும்
கேடுகெட்ட வாழ்விதுவோ
கேள்விகேட்கும் மாந்தர்களே!

தேடும் வாழ்விற் சுதந்திரம்
தேடவேண்டும் தமிழர்களே
பாடும்பறவைபோல்வாழ்வில்
பாடவேண்டும் தாயகத்தில்
நீடும் வாழ்வில் நிம்மதியும்
நிலைக்க வேண்டும் தோழர்களே
கூடுமதில் இன்பம் வந்து
குவலயத்தில் நாளுமொன்றாய்

நாடுதன்னை நாசமாக்கும்
நாதிகெட்டோர் தம்மையிங்கு
ஓடும்நிலை யுருவாக்க
ஒற்றுமையாய்க் கூடிடுவோம்
ஆடுபாம்பாய் ஆடுவதில்
அவனியிலே இன்பமேது
ஊடுநவும் எதிரிதன்னை
உருக்குலைக்க ஒன்றாய்ச்சேர்வீர்.

# என்றும் வாழிய ஈழமதே என்றும் வாழிய தமிழ் ஈழம்

செந்தமிழ்ச் செறிவினிடை செழித்த செந்நாடே
வீரேந்திரன் பிரபா வென்ற தமிழ்நாடே
என்றும் வாழிய எம்நாடே
என்றும் வாழிய தமிழ்ஈழம்.

புயபலன வேங்கை படையயன மலிந்து
புகழுடன் பெறற நமநாடே.

புறநானூறென்னும் திறமான படிணியை
அறமான போர் செய்து அமைத்தனமே
இறந்தாலும் வாழ்வில் இனியீழ மண்ணில
பறககுமெம் புலிக்கொடி ஒன்றதுவே .... என்றும் வாழிய

சங்கிலியன் ஆண்டநகர் - இதில்
செங்களக் கோட்டை வென்ற நகர்
பொங்கு தமிழன் பிறந்த நகர் - இது
புலிகள் வாழ்ந்து போர் ஜெயித்த நகர்
பறநானூறென்......... ஒன்றதுவே ......... என்றும் வாழிய

முத்துக் கொழிக்கும் மன்னாராம் - இங்கு
மீன்கள் பாடும் மட்டுநகர்
மெத்தப் போரில் மேலவிளங்க - என்றும்
மிகையாயப் பெற்ற ஈழமதாம ... .... என்றும் வாழிய

துறைமுகங் கொண்ட திருமலையாம் - இது
நிறைவுறு ஈழத்தின் நிலமுமதாம்
உறைந்திடு புலிகள உயிர்மூச்சாய் இதில்
உலவிய எதிரியை விரட்டியதாம்
புறநானூறென் ... .. ஒன்றதுவே ... ... என்றும் வாழிய

பிரபாகரனாம் படைத்தலைவன் - அவன்
தரமா யளித்த வேங்கைப்படை
சிரத்தில் என்றும் சிந்தையுடன் — இவன்
செலுத்தியே ஈழம் சிறககத் தந்தான்
புறநானூறென் .... ... ஒன்றதுவே ... ... என்றும் வாழிய

# நாட்டுச் சிந்து 1

நல்ல தமிழிங்கு என்றும் நிலைத்திட
நாடியே புரட்சியில் வந்தவன் - ஈழம்
நாடியே புரட்சியில் வந்தவன்
வல்லவன் எங்கள் பிரபாகரன் தன்னை
வாழ்வினிலே போற்றி யேத்துவாம் ...... நல்லதமிழிங்கு

சொல்லு தமிழீழம் ஈங்கு கிடைத்திடிற
சுடர்விட்டுத் தமிழினம் ஓங்குமே - என்றும்
கல்வியிலும் மக்கள் களிப்பினிலுமிங்கு
காசினி யென்றும் மிளிருமே - ஈழக்
காசினி யென்றும் மிளிருமே

எல்லையை ராணுவம் தாண்டிடில் எம்மக்கள்
எங்குச்சென்றோடி ஒளிப்பது - இப்போ
தொல்லையைத் தீர்த்திடத் திரண்டிடுவீர் - எங்கள்
தேசத்தில் ஈழத்தைக் கண்டிட - எங்கள்
தேசத்தில் . ஈழத்தைக் கண்டிட ... ......... நல்லதமிழிங்கு

பொல்லாத அந்நியர் போற்றிய கொள்கையிற்
பொறுமையை இழந்திட்டோம் நாமுமே - இனி
எல்லோரும் சேர்ந்தெங்கள் இயக்கத்திற் சேர்ந்திடில்
ஏற்றிடலாம் சுடரீழமே.

நாட்டு நிலையினை நாங்களுணராமல்
நல்ல பொழுதினை வீணிலே - இங்கு
கூட்டங்கள் கூடிக் களித்துத் திரிவது
கொள்கையில்லை ஈழம் வீணேபோம்.

இத்தனை வேங்கையும் எமக்கொரு காவலாம்
இதனை யுணர்ந்திட மாட்டோமா - இங்கு
மொத்தத்திலேயவர் பாதி குறைந்திடில்
மோதிட வேங்கைகள் வேறுண்டோ.

# நாட்டுச் சிந்து 2

வானம் கறுத்திருள வையகம்நீர் கண்டதம்மா
மானம் தமிழ்காத்த வேங்கை மனமும் மகிழ்ந்ததம்மா ...: வான
ம்கறுத்து

வேறு

நடப்பீழ நானிலத்தில் நாளும்மக்கள் விதைத்தநெல்லு
இடமீழத் தமிழர்க்கு இந்தநெல்லு இவைபோதும் ...: வான
ர்கறுத்து

வேறு

சிங்களரின் அரசாங்கம் செந்தமிழர் நெல்லையெல்லாம்
தங்கள்வச மாக்காமலே தாயகம் தமிழீழம் சேர ...: வானம்
கறுத்து

வேறு

பாடுபட்டுத் தேடுமிந்தப் பசுங்குவியல் நெல்லையெல்லாம்
நாடுகாக்கும் வேங்கையோடு நாமும் சேர்ந்து காத்திடுவோம்
...: வானம்கறுத்து

# நாட்டுச் சிந்து 3

தோட்டத்தினைத் தேடிக்கிட்டுத் தூரவழி போறவரே - இந்தப்
பாட்டினையும் கேட்டிடுவீர் பாசமுள்ள மச்சானே
நாட்டுமக்கள் துயரமெல்லாம் நாமறியப் போச்சுதையா - இனி
ஆட்டுமந்தை போலவிங்கே ஆருமழத் தேவையில்லை ..... தோட்
டத்தினை

வேங்கை கண்ட ஈழத்தில் வேதனைகள் இனியில்லை
பாங்காக உழவரெல்லாம் பார்த்துக் தோட்டம் செய்திடலாம்
தாங்காத துன்ப மெல்லாம் தளிர்விட்ட பயிரினிலே
ஈங்குநன்கு பலிப்பெய்தி இன்குலையாய்த் தூங்குதையா ...:
தோட்டத்தினை

வீசுபுகழ்ப் பிரபாவின் விறல்மிக்க புரட்சியிலே
சேர்ந்துவந்த சொத்ததுவாம் சேரீழப் பூமியதாம்
வளர்ந்துவரும் குழந்தைகளும் உண்மையீழ வாரிசுவும்
ஆய்ந்தசெழுந் தாமரைபோல் அழகொளிர வந்திடுமே ...: தோட்
டத்தினை

## கப்பற் பாட்டு

ஏல ஏலோ - தத்தைதாம் - ஏல ஏலோ
ஏல ஏலோ - தத்தைதாம் - ஏல ஏலோ

தங்கத் தமிழீழத் தானைகள் கண்ட
தமிழர்க்கு வாழ்வினை வழங்கிய பொங்கல்
எங்கள் பிரபா கரன்வழி வந்தே
எழில் வேங்கை யுயிர்தந்து ஏற்றிய பொங்கல்
ஏல ஏலோ - தத்தைதாம் - ஏல ஏலோ

விலங்குகளும் பறைவைகளும் ஊர்வனவும் பிறவும்
கலங்கியே துன்பத்தில் மூழ்கியே கிடக்க
இலங்குபுகழ் வேங்கைகள் இருநிலமீதினிலே
இசைவான போர்தொடுத் தேற்றிய பொங்கல்
ஏல ஏலோ - தத்தைதாம் - ஏல ஏலோ.

எத்தனை இழப்புக்கள் எங்களுக்கு வந்து
மொத்தத்தில நாங்களும் முடிவோமோ என்று
சித்தத்தில் எண்ணியே சிந்தை கலங்க
புத்தொளி தந்திட்ட புதுவீழப் பொங்கல்
ஏல ஏலோ - தத்தைதாம் ஏல ஏலோ.

மாவீரர்நாளில் கன்னாகம் கலைப்பண்பாட்டுக் கழகம் பொறுப்பாளரின் சிபார்கடன சங்கானை வட்டவைப் பிரதேச எல்லைக்குள் செய்த தெருக்கூத்தின் போது பாடிய புரவிப்பாடல், மாவீரர்பாடல், பிறபாடல்கள்.

## பல்லவி

தமிழன் வளர்த்த தமிழின் குதிரை
வருகுது பார் - தமிழ்
மானங் காக்க வீறு கொண்டு
எழுகுது பார்;

## அநுபல்லவி

விண்ணிற் பாயும் வீரமிக்க தமிழரவர் - என்று
வேதம் சொல்லும் காவியத்தை விளங்கவைக்க ... — தமிழன்
வளர்த்த

## சரணம்

அகிலம் போற்றும் புலிகள் வீரச் செயலைப்பாடி - அவர்
ஆட்சியிந்த மண்ணிலென்றும் நிலைக்க நாடி.
தமிழ் மறவர் வேங்கைப்படை தாகங்கொண்டு - இந்தத்
தாரணியில் ஈழம் சேர்ப்பார் எனவுரைத்தே ... ... தமிழன்
வளர்த்த

செந்தமிழும் சிறுத்தையோடு சிறப்பை நல்கும் - இனத்
இந்த வாழ்வில் எழுந்து இந்தக் குதிரை சொல்லும்
சந்ததமும் தமிழன்புகழ் பாடவைக்கும் - என்று
விந்தையோடு வேங்கை புகழை விளங்கவைக்க —... தமிழன்
வளர்த்த

# மாவீரர் பாடல்

## (நாட்டுக்கூத்துச் சிந்து)

### (மாவீரர் தினத்தின்போது பாடப்பட்டது)

ஈகைச்சுடர் மணிகளை நீர் ஆலயத்திற் பாரீர் - இந்த
மாவீரர் புகழ்பாடி இசைந்து ஒலித்திடுமே
வாகை தந்து வரிப்புலியாய் விண்ணதிர வேட்டை
வற்றாமல் பொழிந்துதள்ளித் தமிழீழம் காத்தார்
சயனட்டை அருந்திடவும் சாவதற்கும் துணிந்தார்
அயர்ந்து நாங்கள் தூங்கிவிட்டால் ஆவதென்ன கேளீர்
பட்டமதும் படிப்புமதும் பாரினிலே வருமோ
படைகளன்னி யர்கையில் பிடிக்குளகப் பட்டால்
வானத்தில் விண்ணோர்கள் வீற்றிருந்து மாளிப்பார் - எங்கள்

விடியலெனும் சுதந்திரத்தில் வாழும்வகை கேட்பார்
நேற்றுவரை வாழ்ந்தவாழ்வை நெருப்பிலெரிந்து போகச்
சோற்றுக்காய்ச் சுதந்திரத்தை விற்றபழி போக்கீர்
இளைஞர்களும் யுவதிகளும் இம்மண்ணில் இனிமேல்
இளைத்திடுவீர் தியாகிகளாய் மாவீரர் வழியில்
வயதுசென்று விட்டதென வாய்மூடல் வேண்டாம்
தயவுடனே தமிழீழத் துயர்துடைக்க வாரீர்
மாவீரர் போர்க்களத்தில் மடிந்தகதை கேட்டும்
பாவிகளாய் மனங்கல்லாய்ப் பார்த்திருத்தல் முறையோ ?
சோர்ந்துவிட்டால் வாழ்வினிலே இருள்சூழ்ந்து விடுமே
சொப்பனத்தில் திலீபனவன் சொல்லிவைத்தான் பாரில்
மக்களது புரட்சிவத்தால் தமிழீழம் வருமே
மாபெரிய தியாகியவன் மொழிந்து உயிர்நீத்தான்
அன்னையொடு தந்தைசகோ தரங்களிவ ரின்றி
அடுசமரிற் களத்தினிலே அருமுயிரை நீத்தார்
இன்னல் தமிழீழமதில் இனியிருக்க வேண்டாம்
வன்மனதாய் மாவீரர் வழிநடப்பீர் ஐயா

## மேதின ஊர்வலத்தில் நிகழ்ந்த பாடல்கள்

மாபெரிய ஈழத்தில் மயில்நடையாய் நடந்து - இந்த
மாதிவளும் காணவந்தாள் மேதினத்தை மேலாய்
பூதலத்தில் ஈழத்திற் பொங்கியபே ரெழுச்சி - இந்தப்
பூவுலகம் காணுமென்று பொன்மயிலாய் நடந்தாள் ...... மாபெரிய
ஈழம்

கடலினிலே தொழில்செய்த கட்டுமரம் இப்போ - இங்கே
கட்டாகக் கட்டிவைத்த காரணத்தைக் கேட்டு
நடமாடும் தொழிலாளர் நலிவினையே பார்த்து - அவர்
நாவினிலே நடம்புரியும் நெடியகுரல் கேட்டு ...... மாபெரிய
ஈழம்

மின்சாரம் வழங்காமல் மேலான தொழில்கள் - இங்கே
வன்பாக நிறுத்திவைத்த வேக்காடைக் கேட்டு
நெஞ்சத்திலே நெடுமூச்சில் நிறைந்த நல்ல உறுதி - அவர்
நரான போராட்ட நிகழ்வினையே காண ...... மாபெரிய
ஈழம்

# இனிய சுதந்திரம்
# இசைவுடனே பெறுவோம்

குப்பி விளக்கினில் கொப்பிகள் புத்தகம்
தப்பாமல் லேபடித்த
செம்புழு தாதையர் சீர்பெற்ற வாழ்வினைச்
சிந்தையிலே கொள்ளுவீர்.

சலியாத புத்தியும் களைக்காத எண்ணமும்
சிந்தையிலே வளர்ந்தால் - இங்கு
மலிவுள்ள மருத்துவர் பொறியிய லாளராய்
மாண்புடன் வந்திடலாம்:

மின்சாரம் வந்ததும் சம்சாரம் எல்லோரும்
இஞ்சாரும் சமையலுக்கு - இங்கே
பஞ்சாரும் பலவகை யுண்டிகள் செய்திட
மின்சாரம் வேணுமென்பார்:

கண்ணும் புகையுது கன்னம் சிவக்குது
கண்களில் நீர்வழிய - இன்று
பெண்களுக்கு இதுவிதி யோவென்று வேசியே
பேசுவ தற்கென்செய்கு வாம்.

ஆச்சியும் அப்புவும் ஆனோ ரனைவரும்
அடுப்பங் கரைதனிலே - அன்று
காய்சிய கூழும் கனகலை கொண்டது
கனன்ற விறகினிலே - இதற்கு

மரத்தினை வெட்டினால் மாமழை பெய்யுமோ
மாற்று வழிசொல்லுவீர் - இதனால்
உரத்த மழையின்றி ஒன்றும் உயிரினம்
உயிரிழந்து போமே:

மரக்கன்று நாட்டியே மாற்று வழிசெய்யின்
மாவுயிர் வாழுமென்பாம் - நாட்டிற் (கு)
இரங்குவான் வருணனும் எழில்மிகு சோலையாய்
இத்தமிழ் ஈழம் வாழும்.

அந்நிய ராதிக்கம் அடக்கி யொடுக்கவென
அரும் பொருள் தடைசெய்யினும் - நாம்
இந்நில தமிழ்ழ இனிய சுதந்திரம்
இசைவுட னேபெற்று வோம்.

## மேதின ஊர்வலப் பாடல்.

வயல்வெளி தன்னிலே வான்பயிர் செய்திட
வழியில் லைப் பாரும்.
இயல்பான கொடுமையை இப்போதும் செய்கிறான்
இரக்கம் இலா அந் நியன்.

கிருமிகள் அழித்திடக் கருவிகள் இல்லாமல்
பெருமழி வுபாரும்.
இருந்த மருந்ததும் இங்கு முடிந்திட
இனியென்ன செய்வதம் மா.

விவசாயத் தொழிலாளி விவசாயம் செய்யாமல்
விளைநிலம் காயுதம் மா.
இவனுக்காய் இம்மணணில் இதயசுத்தியுடன்
இக்கணம் போராடுவோம்

மேதின நாளதில் மாதமி ழீழத்தில்
மேலாகப் போராடு வோம்.
எதிர்ந்த அநியாயம் எங்களுக் கோவென
எழுச்சி யுடன்தீரள் வோம.

## நாட்டுக்கூத்து சிந்து மெட்டு

நோயாளிக்கு மருந்து எங்கேடா - நிதமும் நாங்கள்
ஓயாமல் மடிவது வேரடா

தீயாய் உன்றன் திறத்தினாலெமைப்
பாயாய் வந்து படுத்தினாலுமேமீ
தேயா உள்ளத் திறத்தினாலிங்கு
திரண் டெழுவோ மே.

மேதினத்தில நாங்கள் இங்கேதான் - மிகையாகவே
ஓதிடச் சபதம் செய்வோம் பார்.
தீதாய் எங்கள் உரிமைகள்
நீதான் வலிந்து பறித்திட்டாலும்
வாதாடி நம்வேங்கைகள்
வலிந்து வெல்வாரே

வேறு

கல்லும் மண்ணும் சுமந்து மின்றி
கட்டிடம் சமைக்க - இங்கே
நல்ல தொழில் ஏது மின்றி நாம்
தவிந்து மடிவதோ
கொல்லும் உன்றன் கொள்கையினைக்
கூடித் தோழர் நாங்கள் - இங்கு
வல்ல இந்த மேதினத்தில்
வசையாய்ப் பாடிடுவோம்.
ஆயிரம்பேர் பார்த்த தொழில்
அழகுக் கூட்டகத்தை - இங்கே
வாயும் வயிறும் வற்றவென்று

வளையாய் மூடிவிட்டாய்
தேயு மிந்தக் கூலிகள் நாம்
தினமுந் திட்டலும — நீயுந்
தீயாய் வெந்து ஓடாய்ப் போவாய்
தோசாய் பேயரசே.

# பொம்மரும் கெலியும் வந்து பலியெடுக்குமோ?

நாம்பிறந்த ஈழத்தில் நாங்கள் வாழத்தான் — இங்கே
நாதிகெட்டோர் தடையிருக்கு நீங்கள் கேளுங்கள்
சாம்பலைத் தலையிற் கொட்டிச் சாவக் குளிக்கவோ — அந்தச்
சண்டாளர் வலையிற் சிக்கிச் சகதியாகவோ.

பாம்பு அடிக்க வந்தாற் பார்த்திருக்கவோ — இந்தப்
பாதகர்தம் செயலை நாங்கள் அனுமதிக்கவோ
சோம்பலா யிருந்து விட்டாற் சுதந்திரமெங்கே—சீறிச்
சினந்துபுலி யாகியவர் செயலை யடக்குவோம்
தேம்பியஞ்சி ஓடியவர் தினமும் அடக்குவர் —எங்கள்
தேசம் முழுவதையுமவர் அடக்கி யாளுவர்.

சாவுக்கு அஞ்சினாலெம் சரித்திர மெங்கே—நிதம்
சாவதிலும் எதிர்த்துநின்று சரித்திரம் படைப்போம்.

கெலியும் பொம்மரும் வந்தால் கெடிகலங்கவோ— தமிழ்க்
குழவியிதை இன்று கேட்பின் குதுகலிக்குமே
புலிகள்தமி ழீழத்திற் பொலிந்து நிற்கையில்—அவர்
பொம்மரும் கெலியும் வந்து பலியெடுக்குமோ?

# மாவீரர் தானம்

மாவீரர் தானம் மண்மீது மானம்
பூதாவி வானம் புகழ்பாடும் கானம்
நாவினில் நாங்கள் நோவது கண்டு
காவிய துவக்கும் கதைசொல்லும் நமக்கு
கூவிய குயில்கள் குரலடங் கவில்லை
ஓவியன் வரைந்த ஒளிம முங்கவில்லை'

## நாட்டுக்கூத்து சிந்துமெட்டில்

## 1994 - ஆம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் பாடப்பட்டது

டிங்கிரி பண்டா என்ன சொன்னயோ — தமிழீழத்தில்
பொங்கும் புலி வீரம் அறியாயோ!
திங்களை யொத்த தமிழீழ தாரணி தந்த செழுமைகள்
எங்களைக் காக்கும இந்த மண்ணில் உங்களைவெல்வோ நாங்களினி

பூநகரிப் போர் பாடம் புகட்டுமே — புலிகளினால்
மானங் கெட்டான் மேஜர் வணசிங்க
ஆன பதவி திரப்பிட அதிலே ஜெரிம சில்வா வந்து
நானகத்தை கொண்டான் நாளை நாடுவிட்டு ஓடப்போறான்?

மன்னைத் தின்பேசம் என்று சொன்னாயே — மதியில்லா மூடனே
மண்ணின் வளம் நீயறியாயோ;
தண்மையுறு தண்ணீருண்டு தளிர்ப்பயிரின் செழுமையுண்டு
திண்மையுறு தேசமுண்டு தேடும்திற மூளையுண்டு;

## வேறு

அரசியலில் ஆட்டங்கண்டு தோட்டம் போடுகிறாய் — உன்னை
ஆட்டிக் கீழே வீட்டி யதில் ஆட்சி செலுத்துவோமே
தரமுமின்றி வாய்ச் சொல்லினால் தட்டி முழக்குகிறீர் — எங்கள்
உர உளத்தின் உள்ளபலம் உன்னைச் சுட்டிடுமே.

மக்கள் வேறு அரசு வேறு மேல் கட்சி வேறு என்று
திக்குத் திசை யேதுமின்றித் திணறி விழிக்கிறாய் பார்
மக்க ளொன்று வேங்கை யொன்று மனதிற்கொள்கை ஒன்று-எனத்
தக்கபதில் தந்திட நாம் தலைவன் வழியில் வந்தோம்.

படையை விட்டு இராணுவச் சிப்பாய்
பார்த்து ஓடுகிறார் — அங்கே
இடையிற் சிப்பாய் தற்கொலைக்கு
எண்ணி மாய்கிறார் பார்.
நடையில் வேங்கை நாத மின்று
நாளும் ஒலிக்குது பார் — பிரபா
குடையில் வேங்கை மக்களெல்லாம்
கொடியரய்த் திரள்வது பார்.

# மாவீரர் தாயகம் காத்தாரடி

(கும்மிச்சிந்து)

மாவீரர் தாயகம் காத்தாராடி – எங்கள்
மானத்திற்கா யுயிர் விட்டாரடி
சாவினிலும் தமிழ் அன்னையினை – அவர்
சாதனை செய்து அணைத்தாரடி

கல்வியிலும் அவர் வல்லாரடி - நல்ல
கலைகளிலும் அவர் வல்லாரடி
சொல்லும் திறமைகள் பெற்றிருந்தும் – அவர்
செந்தமி ழீழத்தை மதித்ததேனோ?

தந்தையும் தாயுமவர்கிலையோ - சொந்த
தேசத்திற் சோதரர் தாமிலையோ?
பந்தபாசமதும் தாமிலையோ? – தேசப்
பாசத்தில் மூழ்கிய பந்தமேது?

இன்பமிதுவென் றறிந்திடாரோ? – இவர்
இன்மனையாளையும் வேண்டிடாரோ?
அன்புக்குடும் பத்திலாழ்ந்திடாமல் – அவர்
ஆவிதமிழ்த் தாய்க்களித்தது மேன்?

உயிரது சண்டையிற் போயிடுமாம் – அந்த
உண்மையறிந்து முறுதி கொண்டார்
பயிராம்சுதந்திர வித்தினிற்காய் - அவர்
பாசறை சென்று மடிந்தது மேன்?

## வேறு

மாவீரர் வாரமதைப் பாடுங்கடி – எங்கும்
மாவாழை தோரணங்கள் கட்டுங்கடி
பூவீரர் இவாரன்னப் போற்றுங்கடி – நல்ல
பொன்னழகுப் பூச்சரங்கள் சாத்துங்கடி

வீதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்யுங்கடி - எங்கும்
வேண்டியநல் மரங்களைநீர் நாட்டுங்கடி

சேதியிலே சிந்து பாடிச் சேருங்கடி - வீரர்
சேர்ந்துவந்தால் நந்தமக்கு வெற்றிதானடி

தெருவெங்கும் தமிழ்முழக்க ஓசைகள்பாடி - நீவீர்
தென்றலெனும் தாகமதைத் தணியுங்கடி
பெருமையுடன் தமிழ்மானம் காப்பதற்குமே உங்கள்
பேராவி தனைக்கொடுக்க வாருங்கடி

## காவடிச் சிந்து

நாதா தாளம் தமிழீழம் கிடைத்திட
தாதா நல்லூரானே நமக்கருள் தாதாதா (தாதா

தலைவன் பிரபாகரன் தமிழீழம் படைத்திட
அலையாய் மக்கள்எழுச்சி அளிக்க அருள் தாதா
கலையும் மணமும் தேசக் கதிரவன் சுடரொளியும்
விலையில்லா வேங்கைவாழ்வும் வேதமாய் ஒலித்திட (தாதா

இமயமலையிற் சோழன் ஏற்றினான் புலிக்கொடியை
எமது தலைவன் ஏந்தல் எம்மின மரபு காத்தான்
சமயத்தில் வேங்கைச்சின்னம் சாரும்யாழ் கோட்டையில்
நமக்காய் வாழ்வுமலர நாட்டினன் நீள்சமரில் (தாதா)

வேங்கைவீரர்க ளென்றும் விந்தையாய்ப் போர்கள் செய்ய
ஓங்கி உலகினிலே உயர்ந்திட ஓசை தாராய்
பாங்குடன் போர்செய்து பாரினிற் பறையொலி
பகரும்தமி ழீழமாய் பார்த்திட அருள்தாராய் (தாதா

மலரட்டும் தமிழீழ மக்கள் புரட்சிமேலாய்
புலரட்டும் பொங்கியெங்கள் போரினில் ஜெயிக்கட்டும்
வலம்புரிச் சங்கெடுக்கும் வங்கக் கடலுமெங்கள்
கலமதாய்த் திகழ்ந்து காட்சியிற் பொலியட்டும் (தாதா)

சந்தண மரமென்றும் சாவதில்லை வேங்கை
சரித்திரம் ஓர்நாளும் மறைவதுவு மில்லை
செந்தணல் மாவீரர் சிந்திய இரத்தங்கள்
சிந்தையிற் சந்தணமாய் சரித்திர உலகுபோற்ற (தாதா)

தலைவன் பிரபா ஆட தமிழீழ மக்கள் ஆட
நிலைதந்த மாவீரரும் நினைவினில் நின்று ஆட
உலகமும் சுதந்திர உணர்வினைக் கண்டு ஆட
பலரும் மகிழ்ந்துஆடத் தமிழீழம் பெற்றுஆட (தாதா)

## சீலத்தமிழர் வாழ்விலே பாலைவார்த்திடப் பார்க்கிறார்

பொருளாதாரத் தடை போனதுபார் - இந்தப்
பூமிதனில் நாங்கள் வாழ்வதற்கு
அரிசி பருப்புடன் ஆன பொருட்களும்
அள்ளி அள்ளித் தருமரசிதென்ன

மின்சாரம் வருகுது மருந்தும் வருகுது
மேலான வாழ்வு தமிழருக்கு
வின்பான போக்கு வரத்துத் தடையெல்லாம்
வந்த அரசினால் நீங்கியது

சீலத்தமிழரின் வாழ்வினிலே - அவர்
பாலைவார்த்திடப் பார்க்கிறார்பார்
ஆசை விஷம் அவர் அறிகுவீர்காள் - அவர்
ஆனவார்த்தைகளை நம்பிடாதீர்

# 2-ம் லெப்டினனட் வதனன் அவர்களின் நீங்காத நினைவலைகள்

உருவின் நிழலாய் உணர்வின் அலையாய்
திருநாவுக் கரசுமகா வித்தியா லயந்தனில்
அருஆதிக் கல்வி அருகிருந்து கற்று
பெருகுமன்பு தனையளித்த பேசரிய கலையழகன்

இந்துக்கல் லூரிதனில் இணைபிரியாத் தொடர்கல்விப்
பந்தப் பிணைப்பினிலே பழகிவந்து கலைவாணி
தந்த கல்வியிலும் திரமுயர்ந்து இம்மண்ணில்
நந்தம் கைகோர்த்து நாளும் பழகிவந்தான்

கூட்டைவிட்டுக் கிளியொன்று கூவிப் பறந்ததெங்கே
காட்டுநின்றான் காதற் கனிவாய் மொழிப்பேச்சு
ஏட்டுப் படிப்பு இவையெல்லா மெங்கள்
வாட்டமுறு நெஞ்சினிலே வகைவகையாய்த் தோன்றுதிப்போ

மான மறத்தமிழர் மதிநுட்ப வீரனாய்
பூநகரிப் போரினிலே புலிப்பாய்ச்சல் பாய்ந்து
ஈன அரக்கர்விழ இரண்டாம் லெப்டினனாய்
வானதிரும் வதனனாய் வான்புகழ் கொண்டனனோ!

கலையாத கல்வி கலையாத வதனம்
கலையாத சிரிப்பு கலையாத இளமை,
கலையாத உள்ளம் கலையாத நேர்மை
கலையாத ஆற்றல் கலையாக் கலையழகன்

மானமற வேங்கை மதிநுட்பப் போரலையில்
பூநகரிப் போரினிலே பாதைவழி தடுத்துநின்ற
நீன அரக்கர் படை திசைகெட்டுப் போவதற்கு
தானம் உயிர்கொடுத்த தயாளன் வதனன் இவன்

ஒப்பரேசன் தவளையெனும் ஒப்பிலாப்போர்முனையில்
சுபநேர விடியலுக்காய் சீறி வந்த புலியிதென்ன
உபகாரம் தமிழருக்கு உயிர் நாடி தமிழீழம்
செபமாலை சாத்தி சீவனுயிர் தனையளித்தான்

# மாவீரர் கஜேந்திரன் (ஈஸ்வரன்)

## 91 ம் நாள் நினைவஞ்சலி விழாவிற்

## பாடப்பட்ட பாடல்கள்

கலைத்தமிழின் விழாவினையே கண்டுவரும் நேருஜியே
கலைசிறக்க வட்டூரிற் கனிந்து நிற்கு வீரமதே
கலைநகரின் செழுந்தமிழிற் காணுகின்ற புதுவுணர்வே
சிலைவடிப்பீர் வேங்கைதம்மின் சிறப்பினையே சீர்தூக்கி
தலைசிறக்க நிலைகொள்ளத் தமிழீழத் தியாகிகளாய்
விலையில்லா வித்துக்களாய் விளங்கினர் காண் வேங்கைகளே

நாடுகாணும் எழுச்சியிலே – எங்கள்
தமிழன் என்றும் மலர்ந்திருக்கத்
தாயகத் தமிழீழம் காண – நாடு

கேடுகெட்ட சிங்களவர் வந்து – இங்கே
கேள்வியின்றித் தமிழர் தமையழித்து
பாடுபட்ட இனத்தைப் - பசுமுணர்வினூற்றைப்
பாசறையாய் ஆக்கியீழப் பாறைபொலிக்குத் தள்ளினரே
நாடுகாணும்

நீடுதமிழ் கொண்ட வட்டூர் தன்னில் – எங்கள்
நேருஜிநூல் நிலையம்கலை நகரில்
நாடுதமிழ்காக்க நல்லீஸ்வர வேங்கை
நினைவகலா நம்பிள்ளைஞன் நேர்பொருது மாண்டனனே
நாடுகாணும்

புஸ்பராசா பெற்றநற் புதல்வன் – அவன்
பொலிவுறு கஜேந்திரநற் பெயராம்
ஈஸ்வரன் மறுநாமம் இயக்கம்ளி பேராம்
ஈழமதிற் கல்விபிள வத்தையிந்துக் கல்லூரி
நாடுகாணும்

கற்ற கல்வியுடன் கூட்டி வாழ்வில் - என்றும்
களிப்புட்னிவனிருக்க வொண்ணா
நற்றமிழன் துயரை - நாடிமனம் தேடி
வெற்றிதர வேங்கையுடன் விரைந்தவன் தொண்ணூறதிலே

நாடுகாணும்

ஆயுதப் பயிற்சியிலே நிறைந்து - எதிரியை
ஆட்டி வைக்கும் வேங்கையதாய்ப் பொலிந்து
தாயீழம் மலரத் தம்மினத்தைக்காக்க
போயவன் மணலாறதிலே புகழுடம்புதனைத் தந்தான்

நாடுகாணும்

தன்னுயிரை மண்ணுயிர்க்காயீந்த
தங்கமுறு ஈஸ்வரனை யுவந்த
பெரன்னரிய பெற்றோர் புஸ்பராசா குடும்பம்
அன்னவரை வாழ்த்தியவன் அரும்புகழைப்பாடிடுவோம்

நாடுகாணும்

பெண்கள் என்பது அடிமைகளா
பேசாமல் வாழ்வதிற் சேடிகளா
மரியா ஈழ மாதென வாழ்ந்து
மானம் காக்க மடிந்தனளே

(பெண்கள்)

சரித நினைவுகள் சரித்திர வீரத்
திருமகள் கதையினைச் சாற்றிடுமே
வரிப்புலி சரித்திரம் வழங்கிய வீரத்
திருமகள் வட்டூர் மரியாவாம்

பெண்கள்)

கருவினைச் சுமந்த காரிகை தாயின்
காதலை மறந்தாள் இவ்வேங்கை
உருவினைத் தந்த உணர்வுறு தந்தை
உள்ளத்தை மறந்தே வீறு கொண்டான்

(பெண்கள்)

முல்லைத்தீவில் மிகையுறு பயிற்சி
முடித்தனள் வேங்கை விந்தையுடன்
புல்லர் இந்தியப் படையினர் தீயிற்
பொசுக்கினள் மரியா ஈழத்திலே

(பெண்கள்)

இல்லினிற் புவனேந் திரஜோதியெனும்
இனியநற் பாவை யிவள் காணீர்
கல்வியை வெறுத்தாள் கடமையை நினைந்தாள்
கன்னியர் கற்பைக் காக்க வந்தாள் (பெண்கள்)

தொகையறா

ஒளிரும் கதிர்களிங்கு ஒழியிழந்து போகுதையா – எம்
உள்ளத் தெய்வங்கள் உள்ளத்தால் உருகுதையா
தேசமெனும் நாட்டத்தில் நிலையிழந்து நோகுதையா

பாட்டு

நாட்டுக்காய் நீ இறந்தாய் சிவகுமார - எங்கள்
நாவினில் நின்பெருமை நிலவுதையா (நாட்டு)

துணிவுடன் தமிழர்க்குத் துடைப்பாய் துன்பம் என்ற
தொல்லையை நீக்கவந்த உனக்கா துன்பம்
துன்பம்தான் நீ இறந்தால் மாறுமா – கயில்
துயருக்காய்த் திரண்டெழுவோம் புரட்சிவழி (நாட்டு)

அன்னையர்க்கும் தந்தையர்க்கும் அன்பே தெய்வம் – அதில்
அன்பினிலும் தமிழுருயிர் அதுவே தெய்வம்
தெய்வமாய்த் தமிழுருயிர் போற்றினாய் – அந்த
போற்றுதலில் நின்வித்தை நாட்டினாய் (நாட்டு)

# தியாகதீபம் அன்னை பூபதி 5ம் ஆண்டு நினைவஞ்சலியின் போது ஈழநாதத்தில் வெளிவந்த கவிதை

# சொன்ன இலட்சியச் சாவை அணைத்தவள்

அன்னை துயர் துடைக்க அன்னை பூபதி
தன்னை ஈந்தாள் தரணியைக் காக்க
பின்னை இதற்குப் பெரும்பயன் உண்டென
மின்னும் ஒளியாய் மிகை ஒளி பரப்பினாள்

மட்டுநகர் வீதியில் மாகிரான் ஊரில்
கொட்டிய சுதந்திரக் கொழுந்தினில் எரிந்து
எட்டுத் திக்கும் எதிரியின் நரம்பினைச்
சுட்டுப் பொசுக்கி சாதனை படைத்தவள்

தனயர் இருவரும் தமிழீழ மண்ணிலே
இனமுதன் வெறியினில் இழந்த பின்னரும்
மனதினில் உறுதியை மாசிலா நினைவினில்
கனதியாய்க் கொண்டு கலங்கரை யானவள்

அன்னையர் அணியில் ஆயிர மாயிரம்
பின்னிய அணியாய் பேசிட வைத்து
உன்னும் உண்ணா உணர்வுறு தோன்பினில்
சொன்ன இலட்சிய சாவை அணைத்தவள்.

# திலீபா

தாயும் இல்லை தந்தை காக்கத்
தலைவன் வழி சென்றாய்

உலகம் முழுதும் உதய ஜோதி
உணர்வில் நீ நனைந்தாய் - திலீபா
உறவில் பாவானாய் (தாயும்)

அன்னம் நீரும் அருந்தவில்லை
அழகுச் சிலையானாய்
என்ன வந்தும் ஏற்றம் காண
எழும் புரட்சி யென்றாய் - திலீபா
விழும் அரசு என்றாய் (தாயும்)

மரபு வழியில் மாபெரும் கோட்டையில்
மலரும் புலிக்கொடியே
சுரக்கும் சுதந்திர விடியலாமென
சத்தியம் கூறி நின்றாய் - அதை
இத்தரை மீதுகண்டாய் (தாயும்)

தலைவன் பிரபா தரவிற் தமிழில்
திலீபன் மரணம் என்றும்
கலையா மாபெரும் கவின் வரலாற்றின்
கலங்கரை விளக்கமென்றார் காணும்
சம்பவம் இதுவென்றார் (தாயும்)

மக்கள் என்றும் விழிப்பி லிருக்க
முயல வேண்டும் என்றாய்
இக்கணம் வாழ்வில் இதை மறந்தாலே
இருக்கும் துயரென்றாய் - திலீபா
இருளும் சூழுமென்றாய் (தாயும்)

# பார்வையிலே படையினையே நடுங்க வைத்தாய்

கரும்புலியே கரும்புலியே நீ பிறந்தாய்
கடலினிலும் தரையினிலும் கலங்க வைத்தாய்
பெரும் படையை ஒரு புலியாய் வீழவைத்தாய் – உன்
பார்வையிலே படையினையே நடுங்க வைத்தாய்

வண்ணத் தமிழ் ஈழமது வாழ்வு பெற உன்
வயிற்றினிலே குண்டினையே சுமந்து சென்றாய்
எண்ணவில்லை எந்தன் உயிர் போகுமென
எதிரி உயிர் குடிக்கவென நீ பிறந்தாய்

தமிழன் இனி எந்நாளும் சுதந்திரத்தின்
தாகமதில் திளைத்திருக்க வேண்டுமென
நிமிர்ந்து நின்று நேரினிலே நிலைகுலைத்து நம்
நாடுதமிழ் ஈழமதை நிலைக்கச் செய்தாய்

# பத்துத் தளபதி படையில் மடிந்து புலிகளுக்கே ஜெயம்

தாகவீரம் தீர்க்கும் தானம் தமிழ் ஈழமே பதம் இதம்
தாக வீரம் தீர்க்கும் தானம் தமிழ் ஈழமே

உம்நிலையோ உடல் ஊனமதே
உண்மையிலே உயிர் தமிழுக்கதே
புலி தாக வீரம் தீர்க்கும் தானம் தமிழ் ஈழமே (தாக வீரம்)

ஆடிடும் உன்னரசு நிலைத்திடுமோ
ஆனந்தம் உம்வாழ்விற் கணிகலனோ
தமிழன் வாழாமல் தரணியாளாமல்
தலைவன் நீயென்னவோ

நாவில் எம்மீழம் நாடும் தன்னாலே
ஆவியும் அதுவுமென - பாரினில் (பதம் இதம்)

கடற்புலி கடிய உள்ளம் கனலக் கனல
கரும்புலி தீரம் கொண்டு கொல்லக் கொல்ல
சாடும் தளபதி சிதறச் சிதற
நாடும் புலிகள் உனை வெல்ல வெல்ல
பத்துத் தளபதி படையில் மடிந்து புலிகளுக்கே
இது ஜெயம்

புத்தம் புத்தம் படைகள் வரினும்
சித்தம் தன்னிற் சீறும் புலிகள்
சொத்து முத்தென நம்தம் வேங்கைகள்
தமிழர் உமைப் போற்றிப் புகழத்
தாக வீரம் தீர்க்கும் தானம் தமிழ் ஈழமே
புலியுர தாக வீரம் தீர்க்கும் உள்ள வேகமிது
வானமதில் வரும் சகடை
தான் விழநீ இனியழிவாய்
புலிதாக வீரம் தீர்க்கும் உள்ள வேகமிது
புலியுர தாக வீரம் தீர்க்கும் உள்ள வேகமிது.

## சாகரவர்த்தனா சாய்ந்தது

சாகர வர்த்தனா சாய்ந்தது எங்களின்
சாதனை கடற்புலி வீரரால்
வேகப் புயலென வீசியே வேங்கைகள்
வாகை சரிதத்தில் வந்தன

டோறா வெனுமொரு டாங்கிப் படகினை
டும் டும் டும் மென்று தகர்த்தன
மாறாது தமிழீழம் மகிழ்ச்சிக கடலிலே
மானவீரரென்று முழங்கின

தேசம் கடலது தேடும் சுதந்திர
தேசத்தில் எம் வசமாயின
பாசம் தமிழீழப் பந்தமதுவொன்று
பாரினில் ஓசையாய் ஓங்கின

# நாட்டுக்கூத்துச் சிந்துமெட்டு

## பொன்று புகழ்சேர அழிக்கப் படுவாயே!

சுடச்சுட நாங்கள் சோர்ந்திடுவோமோ பார் அடா சிப்பாய்களே!
படபட வெனவே வெடிகள் பொழிவீரோ!
திடமுடன் வெங்கைத திறமறியீரோ
தடதட வெனவரும் சரமறியீரே!
வந்து படும் சரங்களுக்கு முந்திவரும் எமதுகணை
படையில் வயதினிற் பசுரும் சிறுசுகள்
உடையில் வருமுள உறுதிசேர் வேங்கைகள்
கண்டகனம் வெனவெடுக்க கொண்டகுறி புலி தொடுக்கும்
ஆடிநீநிலை குலைந்திட்டு வடிவழித் தோடவெல்லு
சீறிவரும் புலிகளைச் சோரவைப்பாயோ பாராய்
சங்கத் தமிழன் சரித்திரம் நோக்கச்
செங்களம் கண்ட திறமது காக்க
சங்கம மாயுனைத் தொம்தொம் தொம்மென
பொங்கிடு முளமது கம்கம் கம்மென
அந்தாத் தெரிந்து அரகர வென்ன
உந்தன் உடல்கள் ஊனம் சிதறிட
அன்று உல்லான் அழிந்த மாவுயிர்
இன்று கண்டு இன்ப மெய்த
என்றுமெங்கள் வீரம் நன்று நல்நெஞ்சனவ்
பொன்று புகழ்சேர அழிக்கப் படுவாயே!

வேறு

போர்ப்பரணி பாடுவோமே போர்க்களத்தை நாடுவோமே
ஆர்ப்பரிக்கும் அந்நியர்தம் அடிமைவிலங் கொடித்திடுவோம்
தீர்ப்பெமது தியாகங்களாம் திசைகோண வியூகங்களாம்
சீர்த்தமிழன புலிக்கொடியைச் செங்களத்தில் ஏற்றுவதே
(போர்ப்பரணி)

தமிழர்க்கான தாயகத்தைத் தரணிதனில் நாட்டிடவே
அமிழுமெங்கள் அருமொழிக்கால் அகல்விளக்கு ஏந்திடவே
குமிழும்கும்பற் கயவர்கூட்டம் கொடியோர் தம்மை ஒடுக்கிடவே
உமிழும் உள்ளக் குமுறலதால் உணர்வுடனே செலுத்திடுவோம்
(போர்ப்பரணி)

திலீபனவன் இலட்சியத்தைத் தேசமெங்கும் பரப்பிடவே
கலியுகத்திற் தமிழர் வாழ்வைக் காலமெல்லாம் காத்திடவே
தலிவடைந்த நமதுதேசம் நன்மைபெறச் சமைத்திடுவோம்
புலிகள்காலம் பொற்காலமாய் புகழ்சரித்திர நூலமைப்போம்
(போர்ப்பரணி)

## நாட்டுக்கூத்துச் சிந்து
## (வில்லின் வீரம் என்ற மெட்டு)

# போன தேசச் சொந்த மண்ணைப் போகவா விடுவோம்

விருத்தம்

தமிழர் தாகம் தமிழீழம் தானென்னத் தரணிதனில்
சமஞம் வேங்கைக் கனல்தெறிக்கும் காட்டுறுமல் காணீரோ!
உமிழும் உள்ளக் குமுறலதால் உமைமறந்து கொட்டமடிக்காதீர்.

பாடல்

நாமெதிர்த்தால் நாடுவிட்டு நீசர் ஓடுவீர் — இந்த
ஞாலமதில் தமிழர் வாழ்ந்த நாடு நீசறியீர்
பூமிதனில் உங்கள் வீரம் புவனம் கண்டிடுமே — எங்கள்
போன தேசச் சொந்தமண்ணைப் போகவா விடுவோம்?

விருத்தம்

மார்த்தவக்கை மண்டுகம் தான்கிடந்து கதறுதல் போல
வாரி அரசதுவால் வானம் கடல் தரையாய் -வழங்கும் துணையுடனே
பூரித்துப் புலம்பும் போக்கிர்காள் புறங்காணப் போறீர் நீர்

பாடல்

படைகட்டிப் போகப் போறீர் பாரீர் ராணுவமே - உங்கள்
வாடை கண்டால் வேங்கைவீரர் வேலாய் மாறிடுவர்
பீடையுறு பாதகர்நும் படைகள் தன்னிலுள்ள – மிகு
காடைத்தனம் போக்கப்பிர பாகரன் வந்தான்.

வேறு

வந்தாயோ ராணுவமே இந்த வசந்தஈழத்தில் வேங்கையுடன் பொர
சிந்தாகுலத் தமிழர்கள் படையது சேர்ந்து பொருதிடச்
சிதைந்து மாளுவீர்
அனைத்துத் தமிழர்களும் அறுதிமுடிவு கொண்டு
அடக்கியுமை யொடுக்க ஆயினர் காணீர்.

கொக்காவிற் கர்வலரன்தனை கனக்க ராணுவம் குவித்து ஈழத்தில்
மிக்கதோர் முழங்கிடு முகாமென மிகுந்த செருக்குடன் முனைந்து
தோற்றிலும்
அகிலவுலகு போற்ற அரணையுடைத்து வேங்கை
ஆட்சி நிலவுதற்கு வழிசமைப் போமே.

மாங்குளம் உம் சிதனமாவென ஏங்கும் ராணுவ இழிநிலை படைகளை
ஈங்குள்ள தமிழரையடக்கிட இருத்திலும் இனவெறியினுலெடா
தீங்கு புரியுமுந்தன் திறனையடக்கவென
ஓங்கு மெமது வேங்கை யுலகிற் பிறந்தார்

கட்டான வேங்கைகள் தாணிவர் கடித்துக் குதறியே களத்தில்
திமிருவர்
தொட்டால்நின் தொடுகணை யவற்றினைத் துளைத்து மறுகணை
தொடுத்து மாய்க்குவர்
ஈழமறவர்களின் எதிர்கொள் வீரந்தனைக் கோழையென
நினைத்துக் குமுறினையோடா

வேறு

குட்டிக் குட்டிக் கொன்று யோடாநீ — குவலயத்திற்
குனிந்து குனிந் திருப்போமா பாரா
தட்டிப் பறித்தாயெமது தமிழீழ சுதந்திரம்
தொட்டுப்பார் உனை நாங்கள் தாவி அரசினை வெல்வோம்.
பண்டைக் காலச் சரித்திர மென்கே இப்போ நாங்கள்
வெண்ட தமிழ்ச் சரித்திர மெங்கே
கண்ட தமிழ்ச் சரித்திரத்தில்| காலைவெட்டி யொடித்திட்டாலும்
வண்டமிழைப் புலிகள்காக்கும் வீரர்வேங்கை வசனைகூடும்

# ஆசிச்செய்தி

அன்புடையீர்,

வணக்கம். விருது தந்தார்கள். தெரிந்தெடுத்து சொல் பொறுக்கி யாப்பெனும் நாரில், தொடுத்து அணி சேர்த்துத் தங்களால் புனையப் பெற்று அன்று எமக்குச் சூட்டிய பாமாலை மணம் மாறாது, பொலிவு குறையாது என்றும் நின்று நிலைவிடும் தன்மைத்தானதாக உள்ளது.

அப்பாமாலையைக் கையில் எடுத்தவர்களின் முகங் களும் பொலிகின்றன பராட்டுகிறார்கள் அம்மாலை எமது அன்பர்கள் அபிமான பத்திரிகைகள் உள்ள இடங்களுக்குச் சென்று விட்டது. எமது பணிகளை எதுவும் தவறாது தொகுத்தளித்த இப்பாமாலை அக்காரணத்தால் சிறப்புப் பெறுகிறது

வளம் பல பெற்று நெடிதுநாள் வாழ்க என்று வாழ்த்துகிறோம்

இப்படிக்கு
உண்மையுள்ள,
கலாநிதி க. கனகராசா
மில்க்வைற் அதிபர்

# நன்றி கூறுகின்றேன்

★ இசைவாணி திருமதி அன்பரசி கதிர்காமநாதன் எனது நூலாக்
கப் பாடல்களிற் சிலவற்றை இசை கூட்டி மெருகேற்றி விழா
சிறக்க அன்பளிப்புச் செய்ய முன்வந்தமைக்கு அவருக்கும் அவரது
அணிசெய் குழுவினர்க்கும் எனது நன்றியும் பாராட்டும்.

★ நூல்தரும் சிறப்பு நயக்க நுண்ணிய இசை யாத்து நாவலர்
பல்லோர் ஏத்த நாடு கைமாறியது பாடி வந்த வட்டூர்ப்
பைந்தமிழ் இசைக்குழுக்கள் (சர்வேஸ்வரா, இளையமதி, இதய
நிலா, முத்தமிழ்) கூடிலாப் பெருமைதந்தார் இவர்களை வாழ்த்தி
நன்றி இனிதுடன் இயம்புகின்றேன்.

★ எண்ணிலா உதவி தந்து ஏற்புறு விழா சிறக்க திண்ணமாய்த்
திரம் கொண்டு திறம்படச் செயல் புரியும் வட்டு விளையாட்டுக்
கழகத் தலைவருக்கும் கழக இளைஞர்கட்கும் காலத்தால் அழி
யாத கணக்கற்ற நன்றியும் பாராட்டும்.

★ பண்டைய கலைகளான புரவிநடனம், காவடி என்பனவற்றை
எனது பாடல்கள் மூலம் வெளிப்படுத்திய திரு ச. பரமேஸ்வர
நாதனுக்கும், புதல்வருக்கும், அருளம்பலம் கந்தசாமி அவர்களுக்
கும் எனது இதயபூர்வமான நன்றியும் பாராட்டும்.

★ பாடலின் திறம் சேர்த்து பண்புறு அபிநயத்தால் ஆடலாய்த்
தந்த அன்பர் திரு சிவரத்தினம் அவர்களின் புதல்விகளுக்கும்,
மாணவிகட்கும் எனது அன்பும் பாராட்டும் நன்றியும்.

★ சுழிபுரம் தலைமை அலுவலகத்திற்குள்ளடங்கிய சகல உப அலு
வலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பச்சிலைப்பள்ளிப் பிர
தேசசபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மக்கள், யாழ் பட்டப்
படிப்புக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் வட்டுச்சிவன்
சிவஒளி காந்திஜி நேருஜி ஆகிய அனைத்து கி. மு. சங்கங்
கள் சன சமூக நிலையங்கள் சின்னக் கதிர்காம தொண்டர்சபை